# ප්‍රගති වාර්තාව 2013
# முன்னேற்ற அறிக்கை 2013
# Progress Report 2013

## සිවිල් ගුවන්සේවා අමාත්‍යාංශය
## சிவில் விமானசேவை அமைச்சு
## Ministry of Civil Aviation

# පටුන - பொருளடக்கம் - Contents


- සිවිල් ගුවන්සේවා අමාත්‍යාංශය 01
- සිවිල් ගුවන්සේවා අධිකාරිය 09
- ගුවන්තොටුපල හා ගුවන්සේවා (ශ්‍රී ලංකා ) සමාගම 16
- ශ්‍රී ලන්කන් ගුවන්සේවා සමාගම 26
- මිහින් ලංකා පෞද්ගලික සමාගම 30
- නාවික හා ගුවන්සේවා තොරතුරු සහ පර්යේෂණ ආයතනය 33
- சிவில் விமானசேவை அமைச்சு 41
- சிவில் விமானசேவை அதிகாரசபை 50
- விமானநிலைய மற்றும் விமானசேவைக் (சிறிலங்கா) கம்பனி 60
- சிறிலங்கன் விமானசேவைக் கம்பனி 71
- மிகின்லங்கா தனியார் கம்பனி 75
- கப்பல் , விமானசேவை தகவல்கள் மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் 78
- Ministry of Civil Aviation 87
- Civil Aviation Authority 95
- Airport & Aviation Services (SL) Ltd 104
- Sri Lankan Airlines Ltd 114
- Mihin Lanka (PVT) Ltd 118
- Shipping & Aviation Information and Research Institute 121

# சிவில் விமானசேவை அமைச்சு

**<u>தொனிப்பொருள்</u>**

‘‘இலங்கை நாடு தெற்காசிய பிராந்தியத்தின் அதிகப்படியான நட்புணர்வுடனும், போட்டித்தன்மைமிகு வான் மையமாகவும் மேம்படுத்துதல்’’.

**<u>பணி</u>**

‘‘விமானசேவைத் துறையில் தேசிய மற்றும் சர்வதேச ரீதியிலான தேவைப்பாடுகளை பூர்த்தி செய்யும் நோக்கில், போட்டித்தன்மையை முறியடிக்கக்கூடிய தரமான விமானசேவை ஏற்படுத்துவதன் பொருட்டு உடந்தையாயிருக்கும் சிறந்த கொள்கை வரம்பொன்றினை உருவாக்குவதும், வினைத்திறன் மிகு இயக்கமுறையொன்றினை ஏற்படுத்துவதேயாகும்’’

**இலக்குகள்**

- விமானசேவை நடவடிக்கைகள் தொடர்பாக தேசிய கொள்கையொன்றினை நடைமுறைப்படுத்துதல்.
- அமைச்சின் கீழுள்ள தாபனங்களினால் நடைமுறைப்படுத்தப்படும் நிகழ்ச்சித்திட்டங்களுக்காக வசதிகளை வழங்குதல், ஒருங்கிணைத்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் கண்காணித்தல்.
- சர்வதேச தரங்களுக்கு இணங்கும் வகையில் உத்தரவாதம் மற்றும் பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் போட்டித்தன்மை மிகு விமானசேவை வசதிகள் கொண்டு நடாத்துதல்
- விமானப் பயணிகள் மற்றும் வான் சரக்கு போக்குவரத்து நடவடிக்கைகளை அபிவிருத்தி செய்தல்
- உள்ளக விமானசேவை நடவடிக்கைகள் அபிவிருத்தி செய்தல்
- இரு தரப்பு மற்றும் பலதரப்பட்ட சர்வதேச விமானசேவை கலந்துரையாடல்கள் பல்வேறு குடியரசுக்களின் வான் போக்குவரத்து அதிகாரிகளுடன் நடாத்துதல்
- விமானசேவைத் தொழிற்பாடுகளை நிறைவேற்றும்போது ஏனைய அமைச்சுக்களுடனான உள்ளக உறவுகளைப் பேணுதல்.

**முன்னேற்றம் 2013**

- ✓ சர்வதேச விமானசேவைத் துறையிற்குரிய அனைத்து நடவடிக்கைகள் வினைத்திறன்மிக்க மற்றும் விளைவுபெருக்கமுடையதாக சர்வதேச ரீதியில் ஏற்கக்கூடிய முறையில் நிறைவேற்றுவதற்குத் தேவையான பொருத்தமான சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகள் தயாரித்து, அவற்றினை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான பங்களிப்பினை வழங்குதல்.
- ✓ சர்வதேச வான் சேரிடங்கள் மற்றும் பயணத் தடவைகளை அதிகரித்துக் கொள்வதற்குரிய முறையில் குறித்த நாடுகளுடன் இருதரப்பு விமானசேவை தொடர்பான கலந்துரையாடல் மற்றும் உடன்படிக்கைகளை மேற்கொள்ளுதல்.

உதாரணம்- புதிய இருதரப்பு வான் சேவை உடன்படிக்கைகள்- சீசெல்ஸ், அசர்பைஜான்

உடன்படிக்கைகள் புதுப்பிக்கப்பட்ட நாடுகள் - இந்தியா, கொரியா, கசகஸ்தான்

2013 ஆம் ஆண்டில் தென் ஆபிரிக்காவில் சர்வதேச சிவில் விமானசேவை அமைப்பினால் நடாத்தப்படுகின்ற சர்வதேச சிவில் விமானசேவை கலந்துரையாடும் மாநாட்டிற்கு இலங்கையின் சார்பாக பல தூதுவர்கள் கலந்துகொண்டனர். இங்கு எத்தியோப்பியா, பின்லாந்து, கிறீஸ், நிவுசீலாந்துடன் கலந்துரையாடல்களை நடாத்தி புதிய விமானசேவை உடன்படிக்கையிற்காக சுருக்கொப்பமிடப்பட்டது. ஸ்பேன், கென்யா, துருக்கி , டென்மார்க், நோர்வே மற்றும் சுவீடன் போன்ற நாடுகளுடன் நடாத்தப்பட்ட விமானசேவை உடன்படிக்கை புதுப்பிக்கப்பட்டது.

- ✓ மத்தளை இராஜபக்ஷ சர்வதேச விமானநிலைய நிர்மாணப்பணிகள் நிறைவுற்ற பின்னர், சர்வதேச விமானப் பயணங்களுக்காக தொழிற்பாட்டு நடவடிக்கைகளைத் தொடங்குவதற்குவதற்குரிய பங்களிப்பு மற்றும் வழிகாட்டும் நடவடிக்கைளை ஒருங்கிணைத்தல்.

- ✓ புதிய உள்ளுர் விமானநிலைய கட்டமைப்பு வேலைகளுக்காக இனங்கண்டுகொள்ளப்பட்ட பிரதேசங்களில் இயலளவினை கண்டறிந்து அதற்குத் தேவையான அடிப்படை தேவைகளை மேற்கொள்ளுதல்.

- ✓ மட்டக்களப்பு உள்ளக விமானநிலைய நிர்மாணப் பணிகளுக்குரிய தாபனங்களை ஒருங்கிணைத்து வழிநடாத்தும் நடவடிக்கைளை மேற்கொள்ளுதல்.

- ✓ அதிகரித்துக் கொண்டிருக்கும் வான் பயணிகளின் நகர்வு தொடர்பாக கருத்திற்கொண்டு பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின் இரண்டாம் கட்டத்தின் நிர்மாணிப்பு கருத்திட்டங்களின் நடவடிக்கையிற்குரிய தாபனங்களுடன் ஒருங்கிணைத்தல்.

- ✓ அமைச்சின் கீழுள்ள தேசிய விமான சேவை வழங்குனரான சிறிலங்கன் எயார்லைன்ஸ் கம்பனி மற்றும் குறைந்த கட்டண விமான சேவை வழங்குனரான மிகின் லங்கா (தனியார்) கம்பனியிற்காக கடந்த வருடத்திற்ககுள் வழங்கிய மூலதன பங்களிப்பில் 2013 வருடாந்த பங்களிப்பினை வழங்குவதற்குரிய நடவடிக்கைளை மேற்கொள்ளுதல் அந்த மூலதன முகாமைத்துவத்திற்குரிய வழிகாட்டல் மற்றும் மேற்பார்வை நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

- ✓ விமானசேவைத்துறை நூற்றாண்டு நிறைவினை பொருட்டு 2012 ஆம் ஆண்டிறுதியில் கொண்டாடிய விமானசேவை நினைவு தின நிகழ்வுகளுடன் தொடர்புடைய நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல்.

- ✓ அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களை ஒருங்கிணைத்து தேசத்திற்கு மகுடம் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அம்பாறை பிரதேசத்தில் சமூக சேவை நிகழ்ச்சித்திட்டங்களுக்கு பங்களிப்பு வழங்குதல்.

- ✓ அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களினால் மேற்கொள்ளப்படும் பல்வேறுபட்ட விடயங்களுடன் தொடர்புபட்ட குறித்த நிகழ்ச்சித்திட்டங்களை சட்டவாக்குதவதற்குத் தேவையான சட்ட ஒழுங்குவிதி நடைமுறைகளில் தலையிட்டு குறித்த சட்ட அதிகாரத்தினை வழங்குவதற்கு நடவடிக்கையெடுத்தல்.

# ஒதுக்கீட்டுக் கணக்கு - 2013

செலவினத் தலைப்பு இல.: 176 அமைச்சு / திணைக்களம் / மாவட்டச் செயலகம் : சிவில் விமானசேவை அமைச்சர்

| வருடாந்த மதிப்பீட்டில் கொடுக்கப்பட்டுள்ள நிகழ்ச்சித்திட்ட இல: | வரவு செலவு மதிப்பீட்டில் கொடுக்கப்பட்டுள்ள நிகழ்ச்சித்திட்டத் தலைப்பு | (1) வரவு செலவு மதிப்பீட்டில் உள்ள ஒதுக்கீடு | (2) குறை நிரப்பு ஏற்பாடும் குறை நிரப்பு மதிப்பீட்டு ஒதுக்கமும் | (3) நி.பி.66 மற்றும் நி.பி.69 க்கு ஏற்ப மாற்றங்கள் | (4) மொத்த தேறிய ஏற்பாடு | (5) மொத்தச் செலவினம் | (6) நிறுத்தி வைக்கப்பட்ட நிதியேற்பாடு உட்பட சேமிப்பு(மிகை) (4-5) | பக்க இல.(டிஜிஎஸ்ஏ 2 படிவத்திற்கு தொடர்புடைய குறிப்பு) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | |
| | **மீண்டுவரும்** | | | | | | | |
| 1 | தொழிற்பாட்டு நிகழ்ச்சித்திட்டம் | 110,000,000 | 34,371,235 | (3,170,040) | 141,201,195 | 133,075,129 | 8,126,066 | 2 |
| | **உபமொத்தம் (மீண்டுவரும்)** | 110,000,000 | 34,371,235 | (3,170,040) | 141,201,195 | 133,075,129 | 8,126,066 | |
| | **மூலதனம்** | | | | | | | |
| 1 | தொழிற்பாட்டு நிகழ்ச்சித்திட்டம் | 4,200,000 | 55,600,000 | 3,170,040 | 62,970,040 | 58,588,823 | 4,381,217 | 2 |
| 2 | அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் | 14,996,000,000 | 120,054,262 | - | 15,116,054,262 | 14,696,780,101 | 419,274,161 | 21 |
| | **உபமொத்தம் (மூலதனம்)** | **15,000,200,000** | **175,654,262** | **3,170,040** | **15,179,024,302** | **14,755,368,924** | **423,655,378** | |
| | **மொத்த கூட்டுத்தொகை** | **15,110,200,000** | **210,025,497** | **-** | **15,320,225,497** | **14,888,444,053** | **431,781,444** | |

பிரதான கணக்குக் கொடுக்கும் அலுவலர்
பெயர்:
பதவி :
திகதி :

கணக்குக் கொடுக்கும் அலுவலர்
பெயர்:
பதவி :
திகதி :

பிரதான கணக்காளர் / பணிப்பாளர்(நிதி)/ஆணையாளர்(நிதி)
பெயர் :
திகதி :

# கருத்திட்டத்தின் பிரகாரம் மீண்டுவரும் செலவினம்

**செலவினத் தலைப்பு இல.: 176** **அமைச்சு / திணைக்களம் / மாவட்டச் செயலகம்** :சிவில் விமானசேவை அமைச்சர்

**நிகழ்ச்சித்திட்ட இலக்கமும் தலைப்பும்: 01 தொழிற்பாட்டு நிகழ்ச்சித்திட்டம்**

| கருத்திட்ட இலக்கம் / பெயர், ஆளுக்குரிய வேதனாதிகள் மற்றும் சகல கருத்திட்டங்களுக்காகவுமான ஏனைய செலவினம் | வரவு செலவு மதிப்பீட்டு ஒதுக்கீடு | குறைநிரப்பு ஏற்பாடு மற்றும் குறைநிரப்பு மதிப்பீட்டு ஒதுக்கீடு | நி. ஒ. 66 மற்றும் 69 இன் பிரகாரம் மாற்றல்கள் | மொத்தத் தேறிய ஒதுக்கீடு (1+2+3) | மொத்தச் செலவினம் | தேறிய பெறுபேறு மீதி / மேலதிகம் (4-5) |
|---|---|---|---|---|---|---|
| | (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| **கருத்திட்ட இல 01. மற்றும் பெயர் அமைச்சின் அலுவலகம்** | | | | | | |
| ஆளுக்குரிய வேதனாதிகள் | 10,300,000 | 7,281,300 | 86,000 | 17,667,300 | 17,345,781 | 321,519 |
| ஏனைய செலவுகள் | 35,550,000 | 26,389,935 | 2,009,000 | 63,948,935 | 56,602,332 | 7,346,603 |
| **உப மொத்தம்** | **45,850,000** | **33,671,235** | **2,095,000** | **81,616,235** | **73,948,113** | **7,668,122** |
| **கருத்திட்ட இல 02 மற்றும் பெயர் : அமைச்சின் நிர்வாகம் மற்றும் தாபனசேவை** | | | | | | |
| ஆளுக்குரிய வேதனாதிகள் | 24,850,000 | - | (86,000) | 24,764,000 | 24,576,093 | 187,907 |
| ஏனைய செலவினங்கள் | 39,300,000 | 700,000 | (5,179,040) | 34,820,960 | 34,550,923 | 270,037 |
| **உப மொத்தம்** | **64,150,000** | **700,000** | **(5,265,040)** | **59,584,960** | **59,127,016** | **457,944** |
| **மொத்தத் தொகை** | **110,000,000** | **34,371,235** | **(3,170,040)** | **141,201,195** | **133,075,129** | **8,126,066** |

பிரதான கணக்காளர் / பணிப்பாளர்(நிதி)/ஆணையாளர்(நிதி)

திகதி :

# கருத்திட்டத்தின் பிரகாரம் மூலதனச் செலவினம்

**செலவினத் தலைப்பு இல.: 176** **அமைச்சு / திணைக்களம் / மாவட்டச் செயலகம் : சிவில் விமானசேவை அமைச்சர்**

**நிகழ்ச்சித்திட்ட இலக்கமும் தலைப்பும்: 01 தொழிற்பாட்டு நிகழ்ச்சித்திட்டம்**

**கருத்திட்ட இலக்கமும் தலைப்பும் 01 அமைச்சு அலுவலகம்**

| விடயக் குறியீடு | விடய இல. | நிதிப்படுத்தல் (குறியீடு) | விடயங்கள் சம்பந்தமான இலக்கம் | வருடாந்த மதிப்பீட்டில் உள்ள ஒதுக்கீடு | நி.பி. 66, நி.பி. 69 மாற்றங்கள், குறை நிரப்ப ஏற்பாடு மற்றும் குறை நிரப்பு ஒதுக்கீடு | மொத்த தேறிய ஏற்பாடு (1+2) | மொத்தச் செலவினம் | நிறுத்தி வைக்கப்பட்ட நிதியேற்பாடு உட்பட சேமிப்பு(மிகை) (3-4) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | (1) | (2) | (3) | (4) | (5) |
| | | | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| | | | <u>மூலதன செலவுகளின் விபரம்</u> | | | | | |
| | | | <u>மூலதன சொத்துக்களின் மறுசீரமைப்பும் மேம்பாடும்</u> | | | | | |
| 2001 | | 11 | கட்டிடங்களும் கட்டமைப்பும் | 50,000 | 15,569,000 | 15,619,000 | 15,619,000 | - |
| 2002 | | 11 | பொறிகளும் இயந்திர உபகரணங்களும் | 100,000 | - | 100,000 | 71,136 | 28,864 |
| 2003 | | 11 | வாகனங்கள் | 550,000 | 600,000 | 1,150,000 | 1,149,250 | 750 |
| | | | <u>மூலதன சொத்துக்களைக் கையேற்றல்</u> | | | | | |
| 2101 | | 11 | வாகனங்கள் | - | 24,000,000 | 24,000,000 | 19,675,682 | 4,324,318 |
| 2102 | | 11 | வீட்டுத்தேவைப்பொருள்கள் மற்றும் காரியாலய உபகரணங்கள் | 500,000 | 1,588,840 | 2,088,840 | 2,088,706 | 134 |
| 2103 | | 11 | பொறிகளும் இயந்திர உபகரணங்களும் | 300,000 | 781,000 | 1,081,000 | 1,080,544 | 456 |
| | | | **மொத்தம்** | **1,500,000** | **42,538,840** | **44,038,840** | **39,684,316** | **4,354,524** |

பிரதான கணக்காளர் / பணிப்பாளர்(நிதி)/ஆணையாளர்(நிதி)

திகதி :

# கருத்திட்டத்தின் பிரகாரம் மூலதனச் செலவினம்

**செலவினத் தலைப்பு இல:** 176 **அமைச்சின் / திணைக்களத்தின் / மாவட்டச் செயலகத்தின் பெயர் :சிவில் விமானசேவை அமைச்சர்**

**நிகழ்ச்சித் திட்டத்தின் இலக்கமும் பெயரும் : 01 தொழிற்பாட்டு நிகழ்ச்சித்திட்டம்**

**கருத்திட்டத்தின் இலக்கமும் பெயரும் : 02 அமைச்சு நிர்வாகம் மற்றும் தாபன சேவை**

| செலவு விடய இல. | விடய இல. | நிதியீட்டல் (குறியீட்டு இல.) | விடயத்தின் விபரம் | (1) வரவு செலவு மதிப்பீட்டு ஒதுக்கீடு | (2) நி. ஒ. 66 மற்றும் 69 இன் பிரகாரம் மாற்றல்கள், குறைநிரப்பு ஏற்பாடு மற்றும் குறைநிரப்பு மதிப்பீட்டு ஒதுக்கீடு | (3) மொத்தத் தேறிய ஒதுக்கீடு (1+2) | (4) மொத்தச் செலவினம் | (5) தேறிய பெறுபேறு மீதி / மேலதிகம் (3-4) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| | | | **மூலதன செலவுகளின் விபரம்** | | | | | |
| | | | **மூலதன சொத்துக்களின் மறுசீரமைப்பும் மேம்பாடும்** | | | | | |
| 2001 | | 11 | கட்டிடங்களும் கட்டமைப்பும் | 100,000 | 16,000,000 | 16,100,000 | 16,099,720 | 280 |
| 2002 | | 11 | | 100,000 | - | 100,000 | 86,517 | 13,483 |
| 2003 | | 11 | வாகனங்கள் | 600,000 | 377,000 | 977,000 | 976,672 | 328 |
| | | | **மூலதன சொத்துக்களைக் கையேற்றல்** | | | | | |
| 2102 | | 11 | வீட்டுத்தேவைப்பொருள்கள் மற்றும் காரியாலய உபகரணங்கள் | 500,000 | 89,500 | 589,500 | 589,458 | 42 |
| 2103 | | 11 | பொறிகளும் இயந்திர உபகரணங்களும் | 750,000 | - | 750,000 | 743,480 | 6,520 |
| | | | **திறன் விருத்தி** | | | | | |
| 2401 | | 11 | பயிற்சியளிப்பும் திறன் விருத்தியும் | 650,000 | (235,300) | 414,700 | 408,660 | 6,040 |
| | | | **மொத்தம்** | 2,700,000 | 16,231,200 | 18,931,200 | 18,904,507 | 26,693 |

பிரதான கணக்காளர் / பணிப்பாளர்(நிதி)/ஆணையாளர்(நிதி)

திகதி :

# கருத்திட்ட ரீதியான மூலதனச் செலவினம்

**செலவினத் தலைப்பு இல.: 176** **அமைச்சு / திணைக்களம் / மாவட்டச் செயலகம் : சிவில் விமானசேவை அமைச்சர்**

**நிகழ்ச்சித்திட்ட இலக்கமும் தலைப்பும்: 02 அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்**

**கருத்திட்ட இலக்கமும் தலைப்பும் ' 03 சிவில் விமானசேவை அபிவிருத்தி**

| விடயக் குறியீடு | விடய இல. | நிதிப்படுத்தல் (குறியீடு) | விடயங்கள் சம்பந்தமான இலக்கம் | வருடாந்த மதிப்பீட்டில் உள்ள ஒதுக்கீடு | நி.பி. 66, நி.பி. 69 மாற்றங்கள், குறை நிரப்ப ஏற்பாடு மற்றும் குறை நிரப்பு ஒதுக்கீடு | மொத்த தேறிய ஏற்பாடு (1+2) | மொத்தச் செலவினம் | நிறுத்தி வைக்கப்பட்ட நிதியேற்பாடு உட்பட சேமிப்பு(மிகை) (3-4) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | (1) | (2) | (3) | (4) | (5) |
| | | | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| | | | பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலைய கட்டுநாயக்க | | | | | |
| 1 (2104) | | 11 | உள்நாட்டு நிதி | - | 119,972,146 | 119,972,146 | 119,000,000 | 972,146 |
| 2 (2104) | | 17 | வெளிநாட்டு உதவியுடன் இணைந்த உள்நாட்டு நிதி | 2,000,000 | - | 2,000,000 | 1,416,089 | 583,911 |
| 7(2502) | | 11 | மூலதன முதலீடு–சிறிலங்கன் விமானசேவைக் கம்பனி | 12,600,000,000 | 82,116 | 12,600,082,116 | 12,600,082,116 | - |
| 8(2502) | | 11 | மூலதன முதலீடு–மிகின்லங்கா விமானசேவைக் கம்பனி | 1,894,000,000 | - | 1,894,000,000 | 1,894,000,000 | - |
| | | | **மொத்தம்** | **14,496,000,000** | **120,054,262** | **14,616,054,262** | **14,614,498,205** | **1,556,057** |

பிரதான கணக்காளர் / பணிப்பாளர்(நிதி)/ஆணையாளர்(நிதி)

திகதி :

# கருத்திட்ட ரீதியான மூலதனச் செலவினம்

செலவினத் தலைப்பு இல.: 176 அமைச்சு / திணைக்களம் / மாவட்டச் செயலகம் : சிவில் விமானசேவை அமைச்சர்

நிகழ்ச்சித்திட்ட இலக்கமும் தலைப்பும்: 02 அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

கருத்திட்ட இலக்கமும் தலைப்பும் 03 சிவில் விமானசேவை அபிவிருத்தி

| விடயக் குறியீடு | விடய இல. | நிதிப்படுத்தல் (குறியீடு) | விடயங்கள் சம்பந்தமான இலக்கம் | வருடாந்த மதிப்பீட்டில் உள்ள ஒதுக்கீடு | நி.பி. 66, நி.பி. 69 மாற்றங்கள், குறை நிரப்ப ஏற்பாடு மற்றும் குறை நிரப்பு ஒதுக்கீடு | மொத்த தேறிய ஏற்பாடு (1+2) | மொத்தச் செலவினம் | தேறிய பெறுபேறு மீதி / மேலதிகம் (3-4) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | (1) | (2) | (3) | (4) | (5) |
| | | | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| | | | <u>உள்ளக விமானநிலைய அபிவிருத்தி மட்டக்களப்பு</u> | | | | | |
| 9(2104) | | 11 | உள்நாட்டு நிதி | 500,000,000 | - | 500,000,000 | 82,281,897 | 417,718,104 |
| | | | மொத்தம் | **500,000,000** | - | **500,000,000** | **82,281,897** | **417,718,104** |

# இலங்கை சிவில் விமானசேவை அதிகாரசபை

## நோக்கு

''தேசிய பொருளாதார அபிவிருத்தியின் பிரதான உயிர் நாடியாக செயற்படுதல்.''

**பணிகள்**

''தளத்தகை திட்டமிடுகை மற்றும் பலம் பொருந்திய நிர்வாகத்தின் ஊடாக சர்வதேச தரங்கள் மற்றும் பரிந்துரைகளைப் பின்பற்றி பாதுகாப்பு, நம்பகத்தன்மை மற்றும் செயற்திறன் மிக்க தேசிய சிவில் விமானச் சேவை கைத்தொழிலுக்கு அனுசரனை வழங்குதல்.''

**நோக்கங்கள்**

- அரசாங்கத்திற்கு வழங்கப்பட்டுள்ள சிவில் விமானசேவைத் துறையிற்குரிய சர்வதேச இணைப்புக்கள் மற்றும் பொறுப்புக்களை நிறைவேற்றுதல் மற்றும் விதந்துரைக்கப்பட்ட வழக்கங்கள் நாளாந்தம் நடைமுறைப்படுத்துவதற்கு
- தடையாணை / கட்டுப்பாடுகளற்ற இலங்கையின் சிவில் விமானசேவைத் தொகுதி சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளக்கூடிய நிலைமையிற்கு மாற்றம் செய்தல்.
- சிவில் விமானசேவையின் உத்தரவாதம், பாதுகாப்பு, வினைத்திறன், வேலை ஒழுங்கு மற்றும் தனியாள் பாதுகாப்பு உறுதிப்படுத்துதல்
- இலங்கையின் வான்தளத்திலிருந்து இலங்கையின் பிரஜைகளின் நலன்கருதி உச்சளவு பயன்பாட்டினைப் பெறுதல்
- நாட்டினது பொருளாதார அபிவிருத்தி
- வரம்புகளை மீறிய போட்டித்தன்மையினால் ஏற்படும் பொருளாதார வீண்செலவைத் தவிர்த்தல்
- தனிநபர், பண்டங்களின் அணுகல் மற்றும் நகர்வு மேம்படுத்துதல்
- சிவில் விமானசேவைத் துறையினுள் நம்பகரமான சேவைகளை முன்னேற்பாடு செய்தல்
- சிவில் விமானசேவைகத் துறை தொடர்ப்பான கல்வி
- சிவில் வானுார்தி இயல் தொடர்பான அனைத்து அம்சங்கங்களையும் மேம்படுத்துதல்
- பொது மக்கள் சுகாதாரம் பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்துதல்
- சுற்றாடல் பாதுகாப்பு

1946 முதல் இருந்து வந்த சிவில் விமானசேவைத் திணைக்களத்தினை கலைத்து 2002 இன் 34 ஆம் இலக்க சிவில் விமானசேவை அதிகாரசபைச் சட்டத்தின் மூலம் 2002 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 27 ஆந் திகதியிலிருந்து இலங்கை சிவில் விமானசேவை அதிகாரசபை நியதிச்சட்ட நிறுவனமாக தாபிக்கப்பட்டது. அது இலங்கை ஜனநாயக சோசலிஷக் குடியரசின் அரசியல் யாப்பின் 154 வது பிரிவின் கீழ் குறித்த கணக்காய்வு நடவடிக்கைகளுக்காக அரசின் நியதிச் சட்ட சபையாக் கருதப்படுகின்றது. சிவில் விமானசேவை அதிகாரசபையானது 8 உறுப்பினர்களால் ஆனதுடன், அதில் ஐந்து பேர் சிவில் விமானசேவை விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரினால் நியமிக்கப்படுவார்கள். மூவர் நிறைவேற்று அதிகாரத்தினால் நியமிக்கப்படுவார்கள்.

இலங்கை சிவில் விமானசேவைத் துறையின் நடவடிக்கைகள் ஒழுங்குபடுத்தும் பொறுப்பு கையளிக்கப்பட்டுள்ள நிறுவனம் சிவில் விமானசேவை அதிகாரசபையாகும். அத்துடன், இலங்கை சர்வதேச சிவில் விமானசேவை மாநாட்டில் தரப்பினராக, நடைமுறைப்படுத்துவதற்கு இணைந்துள்ள சிக்காகோ உடன்படிக்கையிற்குரிய 18 ஆவது இணைப்பில் உள்ளடங்கப்பட்டுள்ள சர்வதேச சிவில் விமானசேவை தரங்கள் மற்றும் விதந்துரைக்கப்பட்ட வழக்கங்கள் நாட்டினுள் சட்டவாக்கம் செய்வதற்கு நடவடிக்கையெடுத்து செயல்படுத்தும் பொறுப்பும் இந்த தாபனத்திற்கு கையளிக்கப்பட்டுள்ளது. அதேபோல தெளிவான மற்றும் சுருக்கமான வான் பாதுகாப்புத் தேவைப்பாடுகள் வழக்கத்தில் கையாளுதல் மற்றும் ஒழுங்குமுறைகளை மேம்படுத்துதல் மற்றும் அமுலாக்குதல் அல்லது அங்கீகரித்துக்கொள்ளுதல் மற்றும் தரங்களின் பாதுகாப்புச் செயற்பாட்டில் ஈடுபடுத்துவது தொடர்பாக செயலாற்றுவதற்கு சிவில் விமானசேவை அதிகாரசபையிற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. மேலும் சிவில் விமானசேவை அதிகாரசபை சிவில் விமானசேவை அபிவிருத்தியிற்கு மற்றும் சிவில் விமானசேவைத் தொடர்பான பிரச்சினைகளுக்கு தந்திரோபாய மதியுரைகளை வழங்குவதற்கு இணைந்துள்ளது.

**2013 இன் பௌதீக வளர்ச்சி**

மீளாய்வுட்படுகின்ற கால எல்லைக்குள் சிவில் விமானசேவை அதிகாரசபையினால் மேற்கொண்ட தொழிற்பாடுகளில் சான்றுப்படுத்துகை மற்றும் கண்காணித்தல் தொழிற்பாடுகளில் ஈடுபடுதல் முக்கிய இடத்தினை வகிக்கின்றன. அதேபோல அக்காலப்பகுதிக்குள் தாபனத்தினை மீளமைக்கும் தொழிற்பாட்டிற்குரிய நடவடிக்கைகள் போன்று பதவியணியினர் பயிற்றுவிப்பதனூடாக தாபனத்தின் கொள்ளளவு மேம்படுத்துவதற்கு முயற்சியெடுக்கப்பட்டது. அதற்கு மேலதிகமாக சிவில் விமானசேவை அதிகாரசபையிற்கு தேவையான கட்டிடங்களை நிர்மாணிக்கும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன.

மத்தளை இராஜபக்ஷ சர்வதேச விமானநிலைய சர்வதேச பயணிகள் போக்குவரத்துக்குரிய சான்றுபடுத்துகை முதலாவது தவணைக்குள் முதலிடம் கொடுத்து மேற்கொள்ளப்பட்டது. தேவையான தொழிற்பாட்டுத் தொகுதிகள் பொருத்துவது தொடர்பாக தொடர்ந்தும் கண்காணித்தல், துறைவாரியான சுற்றுலா மற்றும் கூட்டங்கள் மூலம் விமானநிலைய தொழிற்பாட்டாளருக்கு உதவுதல் மற்றும் மதியுரைகளை வழங்கி மத்தளை இராஜபக்ஷ சர்வதேச விமானத்திலையத்தினை சான்றுபடுத்துவதற்கான கணக்காய்வு 2013 மார்ச் மாதம் 04 ஆந் திகதியிலிருந்து 08 ஆந் திகதி வரை நடாத்தப்பட்டதுடன் வாரத்துக்குப் பின்னர் மேலும் இரு திகதிகளில் கணக்காய்வு நடாத்தப்பட்டது. அப்போது விமானநிலைய தொழிற்பாடுகள், விமானநிலையத்துடன் தொடர்புடைய சேவைகளை வழங்குதல், விபத்திலிருந்து மீட்டுதல் மற்றும் தீயணைப்புக்கள், பாதுகாப்பு, வான் தொழிற்பாடுகள், நில தொழிற்பாடுகள், விமானங்களின் பராமரிப்பு, எரிபொருள் விநியோகம், துணைச்சேவைகளான

உணவு, நீர் விநியோகம், வானூர்தி உள்ளக சுத்திகரிப்பு , வான்போக்குவரத்து மற்றும் பயணிகளுக்கு வசதிகளித்தல் போன்ற பிரிவுகள் கணக்காய்விற்குட்படுத்தி சிவில் விமானசேவை விதிமுறைகளுக்கு உள்ளடங்கப்பட்ட கட்டளைகளுக்கு இணங்குவதனை சான்றுபடுத்தப்பட்டது. விமானநிலையத்தின் பிரதான திட்டத்திற்குரிய பங்குகள் செயற்பாட்டில் ஈடுபடுத்துவது தொடர்பாக கணக்காய்வில் மேலும் கண்டறியப்பட்டது. சிவில் விமானசேவை அதிகாரசைபயால் கணக்காய்வு தொடர்பான அனைத்து நடவடிக்கைகளும் நிறைவுசெய்து 2013 மார்ச் 18 ஆந் திகதி தேவையான இணக்கச் சான்றிதழ் வெளியிடுவதன் மூலம் விமானநிலையத்தினை திறப்பதற்காக வசதிகள் ஏற்படுத்தப்பட்டன. சிவில் விமானசேவை அதிகாரசபையால் மத்தளை இராஜபக்ஷ சர்வதேச விமானநிலையத்தின் கணக்காய்வு நடவடிக்கைகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்படும். புதிய விமானநிலையத்தின் தொழிற்பாட்டு வினைத்திறன் மேம்படுத்துவதற்காக வான் பயண நேர /தடைவ ஒதுக்கும் கருவி அறிமுகப்படுத்தப்பட்டது.

உள்நாட்டு விமான நிலையங்களின் அபிவிருத்தியிற்குரிய மட்டக்களப்பு விமானநிலையத்தில் ஓடுபாதை, 1066 மீட்டர் தொடக்கம் 1535 மீட்டர் வரை விரிவாக்குவதற்கும் MA60 ரக 48 பயணிகள் கொண்டு செல்லக்கூடிய விமானமொன்றினை தொழிற்படுத்துவதற்கு ஏற்றவாறு அபிவிருத்தி செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் சிவில் விமானசேவையின் வழிக்காட்டலின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. புதிய உள்ளக விமானநிலையமொன்று நிர்மாணிப்பதற்கு உகந்த இடம் நுவரெலியா பிரதேசத்தில் இணங்கண்டுகொள்ளப்பட்டது.

உள்நாட்டு விமானநிலைய உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதனால் விமானசேவைக் கம்பனிகளுக்கும் விமானசேவைப் பயணிகளுக்கும் அதின நன்மைகள் கிடைக்கின்றன. விமானசேவைக் கம்பனிகளின் தொழிற்பாடுகள் உயர்வடைதல் நாட்டின் விமானசேவை வளர்ச்சியின் நேர்மறைவான அம்சமாகும். கொரியன் எயார், டர்கிஸ் எயார்லைன்ஸ் மற்றும் பிரிட்டிஸ் எயார்வேஸ் போன்ற விமானசேவைக் கம்பனிகளின் வெளிநாட்டு விமான தொழிற்பாடுகளுக்காக சான்றுபடுத்தப்பட்டதுடன் தனது தொழிற்பாடுகள் இலங்கையிற்குள்ளும், அதற்கு வெளியேயும் பயணிகள் போக்குவரத்து சேவைத் தொடங்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வான் தொழிற்பாட்டுக் கம்பனிகள் உறுதிபடுத்தப்படுத்தும் சந்தர்ப்பத்தில் காணப்பட்ட தரங்கள் எதுவித மாற்றமின்றி அவ்வாறே கொண்டு செலுத்துவதனை உறுதிப்படுத்துவதற்காக முறைப்படுத்தும் கணக்காய்வுகள், ரேம்ப் பரிசோதனைகள், இடையில் ஆய்வுத் தொழிற்பாடுகள், முக்கிய தலைமையக ஆராய்ச்சிகள் உள்ளடங்களாக புலனாய்வு மீளாய்விற்குள் உட்படுத்தும் காலப்பகுதிக்குள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மின்னணுவியல் விமான பைகள் கையாளுவதற்காக நடைமுறைப்படுத்தும் கொள்கை வெளியிடுவதன் மூலம் விமானத்தின் உள்ளே கையாளும் ஆவணங்களின் அளவை குறைப்பதற்கு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

புதிய உள்ளக விமான தொழிற்பாட்டு கம்பனியான சினமன் எயார் (Cinnamon Air) இற்காக விமான தொழிற்பாட்டுச் சான்றிதழ் வெளியிடுவதன் மூலம் நாட்டிற்குள் வான் பயண வளர்ச்சியிற்கு ஒத்துழைப்பு வழங்கியுள்ளது. சினமன் எயார் மிதக்கும்நிலை விமானத் தொழிற்பாடுகள் இந்த வருடத்துக்குள் ஆரம்பிக்கப்பட்டன. பொல்கொல்லை நீர்த்தேக்கம் மற்றும் தியவன்னா ஓய புதிய மிதக்கும் நீர் நிலையங்களாக அங்கீகரிக்கப்பட்டன. மேலும் வருடத்துக்குள் உள்ளக விமான தொழிற்பாட்டு அனுமதிப்பத்திர சான்றிதழ்கள் 4 புதுப்பிக்கப்பட்டன. கேடிக்கை நடவடிக்கைகளுக்காக விமானசேவையை ஈடுபடுத்துவதனை மேம்படுத்துவதற்கு உல்லாச பயணத்தினை நோக்காக் கொண்டு 2013 பெப்ருவரி மாதம் பெரா மோட்டரிங் கண்காட்சி நடாத்தப்பட்டது. வெப்பக் காற்று பலூன் நடவடிக்கைகள் 2013/2014 பருவக் காலத்தில் ஆரம்பிக்கப்பட்டன.

விமானமொன்றில் விமான தகைமையானது வான் பாதுகாப்பினை பேணுவதற்குத் தேவைப்படும் முக்கிய காரணியாகும். சிவில் விமானசேவை அதிகாரசபையில் முக்கிய பொறுப்பாக அமைவது நாட்டின் விமானசேவைக் கைத்தொழிற்துறையில் தொடர்வாறியான உத்தரவாதம் செயலாற்றுகையினை கொண்டு நடாத்துவதற்காக தாக்கம் விளைவிக்கும் விமானத் தகைமை பிரிவுகளான வான் போக்குவரத்து தொழிற்பாட்டாளர்கள், அங்கீகரிக்கப்பட்ட பராமரிப்பு அமைப்புக்கள் மற்றும் தனிநபர்கள் மற்றும் தாபனங்கள் மேம்படுத்துதல், புதுப்பித்தல், விமானங்கள் மற்றும் அதன் பகுதிகளின் பராமரிப்பு, குறித்த நபர்களை பயிற்றுவித்தல் மேற்கொள்வதாகும்.

வான்தகைமைகளுக்குரிய குறித்த சீரான நடவடிக்கைகளாக (9) புதிய பராமரிப்பு அமைப்புக்கள் சான்றுப்படுத்தப்பட்டதுடன், ஏற்கனவே சான்றுப்படுத்தப்பட்ட (57) பேர்களின் சான்றிதழ்கள் புதுப்பிக்கப்பட்டன. (11) புதிய வானூர்திகள் பதிவு செய்யப்பட்டதுடன், ஏற்கனவே பதியப்பட்ட (54) வானூர்திகளின் பதிவுகள் புதுப்பிக்கப்பட்டன. 239 சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டதுடன், (44) வேலைத்தள அனுமதிகள் வழங்கப்பட்டன. 06 புதிய வானூர்திகளுக்கு வான்தகைமைச் சான்றுப்படுத்தல்கள் புதிதாக மேற்கொள்ளப்பட்டதுடன், 27 வானூர்திகளுக்கு வான்தகைமைச் சான்றுப்படுத்துகைகள் புதுப்பித்துக் கொள்ளப்பட்டன. 93 விமானசேவை நிகழ்வுகள் முடிவுக்கு கொண்டு வரப்பட்டன.

வான் உத்தரவாத துறையின் பறத்தல்கள், வானூர்தி பராமரிப்பு, மற்றும் வான் பயண கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடும் நபர்களுக்கு சான்றிதழ்களை வெளியிடுதல் மற்றும் அவர்களின் திறமைகளை கொண்டு நடாத்துதல் பிரதான முறைமை வாய்ந்த செயல்நடவடிக்கையாகும்.

தனிநபர் உரிமங்களை வெளியிடும் தொழிற்பாட்டிற்கு பயிற்சி நிறுவனங்கள் மற்றும் பயிற்சி பாடநெறி அங்கீகரிப்புக்கள் மற்றும் குறித்த பரீட்சைகளை நடாத்துதல், தேவையானவாறு மதியுரையாளர்களை பரிசோதகர்களை அங்கீகரித்தல். எழுத்து மூலமான மற்றும் செய்முறைப் பரீட்சைகளை நடாத்துதல், மருத்துவ பரிசோதனைகள் போன்றவை

உள்ளடங்கப்படும். மேற்குறிப்பிட்ட பல்வேறு காரணங்களுக்கு இயைவாக அனுமதிப்பத்திரங்களை புதுப்பிதலும் மேற்கொள்ளப்படும்.

மீளாய்விற்கு உட்படுத்தப்பட்ட காலத்தில், 126 மாணவ பயிற்சி விமானி அனுமதிப்பத்திரங்கள், 36 தனிநபா் விமானி அனுமதிப்பத்தரங்கள், 76 வாத்தக விமானி அனுமதிப்பத்திரங்கள், 30 தொழில்சார் விமானி அனுமதிப்பத்திரங்கள் உள்ளடங்களாக 910 தனிநபர் அனுமதிப்பத்திரங்கள் மற்றும் சான்றிதழ்கள் வெளியிடப்பட்டுள்ளன. இதற்கு மேலதிகமாக 73 வானூர்திப் பராமரிப்பு அனுமதிப்பத்திரங்களும், 14 பறத்தற் தொழிற்பாட்டு உத்தியோகத்தா் அனுமதிப்பத்திரங்களும் 229 வானறைப் பராமரிப்பு குழு உறுப்பினா் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. உரிமங்களை புதுப்படுத்தலின் கீழ், 401 வானூர்திப் பராமரிப்புப் பொறியியலாளா் அனுமதிப்பத்திரங்களும், 26 வான் நெரிசற் கட்டுப்பாட்டாளா் அனுமதிப்பத்திரங்களும் 512 பறத்தற் குழு உறுப்பினா் சான்றிதழ்களும் புதுப்பித்து வைக்கப்பட்டன.

மீளாய்விற்குட்படுத்தும் கால எல்லைக்குள் பறத்தற் பயிற்சியளிப்பு பாடசாலைகள் ஆராய்ச்சி, விமானசேவைக் கம்பனிகளின் தொழிற்பாடுகள், பராமரிப்பு அமைப்புக்களின் அங்கீகரிப்புக்கள் மற்றும் பறத்தல் பயிற்சி பாடசாலை சான்றுப்படுத்துவதற்குரிய முறையில் 2013 வருடாந்த புலனாய்வு நடவடிக்கைகள் 100% ஆனவை நிறைவு செய்துள்ளன.

தனிநபர் உரிமங்களை வெளியிடுதல் தன்னியக்க தொகுதியின் கீழ் எடுத்துக் கொள்ளுதல் சேவை வழங்குங்குவதிலுள்ள வினைத்திறன், வழுவின்மை, விளைவுபெருக்கம் சேவைகளை வழங்குவதற்கு அவசியமானதாக அமைகின்றன. இலங்கை விமானப்படையிலுள்ளவர்களுக்கு இராணுவ அனுபவம் சிவில் விமானி அனுமதிப்பத்திரங்களை வெளியிடும்போது ஏற்றுக் கொள்வதற்குத் தேவையான அணுகுமுறை தயாரிக்கப்பட்டு வருகின்றது. மாலைதீவில் நடாத்தப்படும் விமானி அனுமதிப்பத்திர பரீட்சையை அறிமுகப்படுத்துவதும் நபர் அனுமதிப்பத்திரங்களை வெளியிடுவதற்காகவுள்ள மருத்துவப்பரீட்சை தொகுதி மேம்படுத்துதல் நடவடிக்கையானது முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

மீளாய்விற்குட்படும் வருடத்துக்குள் 2010 ஆம் ஆண்டு 14 ஆம் இலக்க சிவில் விமானசேவை சட்டத்திற்குரிய விமானசேவை பாதுகாப்பு ஒழுங்குமுறைகள் செயற்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சர்வதேச சிவில் விமானசேவை அமைப்பினால் வெளியிடப்படும் புதிய தரங்களுக்கு இயைவாக குறித்த ஆராய்ச்சிகள் மேம்படுத்தப்பட்டதுடன் துறையிற்குரிய நபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

விமானநிலைய பாதுகாப்புசேவைகளை வழங்குபவர்களை உறுதிப்படுத்துவதற்காக விமானநிலைய மற்றும் விமானசேவை (சிறிலங்கா) கம்பனியுடன் இணைந்து மேற்கொள்ளப்பட்டது. உத்தரவாதங்களை கண்காணிப்பவர்களாக 349 பேர்

உறதிபடுத்தப்பட்டன. விஷேட விமானசேவை உத்தரவாத பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் சனாதிபதி பாதுகாப்பு பிரிவு 25 பேருக்காக நடாத்தப்பட்டன.

சர்வதேச சிவில் விமானசேவை அமைப்பினால் நடாத்தப்பட்ட கணக்காய்வின்போது இலங்கை சர்வதேச தரங்கள் மற்றும் விதந்துரைக்கப்பட்ட வழக்கங்களுக்கு இயைவாக சிவில் விமானசேவையின் பாதுகாப்பு, உத்தரவாதம் மற்றும் நடாத்தும் வீதம் 85% ஆக கொண்டுநடாத்தப்பட்டது. இந்த வெற்றி, விமானசேவைக் கம்பனியின் தொழிற்பாட்டாளர்கள் தனது தொழிற்பாடுகள் இலங்கையிற்குள் நிகழ்த்தும் நம்பிக்கை உறுதிப்படுத்துவதற்கு காரணமாக அமைவதால் சுற்றுலாக் கைத்தொழில்துறையின் வளர்ச்சி மற்றும் நாட்டின் பொருளாதார அபிவிருத்தியின் நேர் மறைவான காரணியாக அமைந்துள்ளன.

இலங்கையைப் போன்று வெளிநாட்டு விமானசேவைக் கம்பனிகளுக்காக புதிய சேரிடங்களுக்குரிய பாதைகளைத் திறந்து தென்-கொரியா, சீசெல்ஸ், அஸர்பைஜான், கஸகஸ்தான் மற்றும் இந்தியா போன்ற நாடுகளுடனும், தென் ஆபிரிக்காவில் நடைப்பெற்ற சர்வதேச மாநாட்டினை பிரதிநிதிப்படுத்தி இரு தரப்பு விமானசேவை கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டன. இவ் வருடத்தில் பிரிட்டிஷ் எயார்வேய்ஸ், கொரியன் எயார்லைன்ஸ், எயார் ஏசியா X மற்றும் துருக்கீஸ் எயார்லைன்ஸ் முறையே லண்டன், Seoul, குவாலம்பூர் மற்றும் Istanbul இலிருந்து இலங்கையிற்கு வான் தொழிற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. இது நாட்டின் பொருளாதாரம் மற்றும் சுற்றுலாக் கைத்தொழில்துறையில் அபிவிருத்தியிற்கு பேருதவியாக உள்ளன.

2013 நொவெம்பர் மாதம் இலங்கையில் நடாத்தப்பட்ட பொதுநலவாய கூட்டத்தில் வான் தொழிற்பாடுகளுக்காக அங்கீகாரங்களை வழங்கி சிவில் விமானசேவை அதிகாரசபை பாரிய கடமைப்பாங்கினை நிறைவேற்றியிருப்பதுடன் அரச தலைவர்களுக்கான பொதுநலவாய மாநாடு நடந்த காலப்பகுதிக்குள் பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தில் வான் தொழிற்பாடுகள் தொடர்பாக உத்தரவாதம் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பாக 24 மணித்தியாலங்களுக்குள் பாதுகாப்பு நடவடிக்கைகள் நிறைவேற்றப்பட்டன.

புதிய 107 வான் போக்குவரத்துக் கம்பனிகளுக்கு அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டதுடன், 395 அனுமதிப்பத்திரங்கள் புதுப்பிக்கப்பட்டன. இது போக்குவரத்து துறையில் புதிய வேலைவாய்ப்புக்கள் மற்றும் தொழில் முயற்சிகளை உருவாக்குவதற்கு உதவியாகவுள்ளது. சுற்றுலாக் கைத்தொழில்துறையிற்குத் தேவையான சிறந்த பயிற்சி மனிதவள அபிவிருத்தி உருவாக்குவதற்காக சிவில் விமானசேவை அதிகாரசபையால் 07 ஆவது மாணவ குழுவிற்காக ஆசனங்களை ஒதுக்குதல் மற்றும் கட்டணங்களை கணக்கெடுக்கும் முறை தொடர்பான பாடநெறி பூர்த்தி செய்யப்பட்டது.அங்கீகரிக்கப்படாத வான் போக்குவரத்துக் கம்பனிகள் மற்றும் உல்லாச பிரதிநிதிகளுக்கு எதிராக முன்வைக்கப்பட்ட விசாரணைகள் பற்றி நடவடிக்கை எடுக்கப்பட்டன.

சிவில் விமானசேவை அதிகாரசபை தனது முக்கிய கடமைகளாக வான் பாதுகாப்பு மற்றும் வானோடல் போக்குவரத்துச் சேவைகளின் இணக்கப்பாடு, வினைத்திறன் மற்றும் துறைமைத்திறம் ஒழுங்குபடுத்தும் நிறுவனமாக எதிர்பார்க்கப்படும். இது தொடர்பாக மனிதவளத்தினை மேம்படுத்துதல், அலுவலக முகாமைத்துவம் மற்றும் நிதி முகாமைத்துவம் தொடர்பாக ஒருங்கிணைந்த கிளையானது தேவையான நடவடிக்கைகளை நிறைவேற்றுகின்றது.

சிவில் விமானசேவை அதிகாரசபையினது விடயப்பரப்பினை எடுத்து நோக்கும்போது அதன் சிறந்த மனிதவள தேவைப்பாடாக விளங்குவது ஊழியர்களுக்கு வழங்கவேண்டிய பயிற்சி நடவடிக்கைகளாகும். இங்கு தாபனத்தின் தொழில்நுட்பம் மற்றும் நிறைவேற்று தரத்தின் உத்தியோகத்தர்களுக்கான தயாரிக்கப்பட்ட விஷேட பயிற்சி திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படும். இந்த திட்டத்தினை பிரயோகித்து வருடாந்தம் நிறைவேற்று உத்தியோகத்தர்களுக்கும், தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கும் ஏனைய அனைத்து மட்டங்களிலுள்ள ஊழியர்களுக்கும் வருடாந்த பயிற்சித் திட்டம் அனைத்து வருடங்களிலும் அதிகாரசபையின் அங்கீகாரத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும். இந்த வருடத்துக்குள் 32 வெளிநாட்டு பயிற்சி வாய்ப்புக்களும், 263 உள்நாட்டு பயிற்சி வாய்ப்புக்களும் முறையே ரூ 16 மில்லியன் மற்றும் ரூ 1.4 மி. செலவில் வழங்கப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக உலக விமானசேவைக் கைத்தொழிலுடன் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்வதற்காக வெளிநாட்டு ஒன்றுகூடும் மாநாடுகள் மற்றும் கருத்திட்டங்களுக்காக ரூ. 22 மில்லியன் செலவும் செய்யப்பட்டுள்ளது.

சிவில் விமானசேவை சர்வதேச கைத்தொழில் ஆதலால் சர்வதேச உறவுகளை கொண்டு நடாத்துதல் சிவில் விமானசேவை அதிகாரசபையால் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கையாகும். ஆதலால் சிவில் விமானசேவை அமைப்பில் 38 ஆவது சம்மேளனம் உட்பட பிரதான சர்வதேச சந்திப்புக்கள் மற்றும் பல மாநாடுகளுக்கு சிவில் விமானசேவை அதிகாரசபை கலந்துகொண்டது. சர்வதேச சிவில் விமானசேவை அமைப்பில் 38 ஆவது சம்மேளனத்தில் இலங்கை சிவில் விமானசேவை அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம் பொருளாதார ஆணைக்குழுவின் உப தவிசாளராக நியமிக்கப்பட்டார். 2016 ஆம் ஆண்டில் இலங்கையில் நடாத்துவதற்கு இருக்கும் சிவில் விமானசேவை பணிப்பாளர் நாயகத்தின் கூட்டத்திற்காக ஒழுங்கமைப்பு நடவடிக்கைகளின் அவதானிப்பினை நோக்காகக் கொண்டு பெங்கொக் இல் நடாத்தப்பட்ட 50 ஆவது சிவில் விமானசேவை பணிப்பாளர் நாயகத்தின் கூட்டத்திற்கு சிவில் அதிகாரசபையின் பிரதிநிதிகள் பலர் கலந்துகொண்டனர்.

சிவில் விமானசேவை அதிகாரசபையின் தகவல் தொழில்நுட்ப கொள்கையிற்குத் தேவைப்படும் திருத்தங்கள் உள்ளடக்கப்பட்டு புதுப்பிக்கப்பட்டன. தொழில்நுட்ப நூலகம் சிவில் விமானசேவை அதிகாரசபையின் பதவியணியினருக்கு மாத்திரமன்றி விமானசேவைக் கைத்தொழிலில் ஈடுபடும் வெளிவாரி நபர்களுக்கும் வசதிகள் ஏற்படுத்துதல்.

சிவில் விமானசேவை அதிகாரசபை மீளமைப்பதற்குத் தேவையான முன்மொழிவுகள் தயாரித்துள்ளது. அந்த முன்மொழிவுகள் இப்போதைக்கு நிதி மற்றும் திட்டமிடல்

அமைச்சின் மற்றும் சம்பள ஆணைக்குழுவின் கலந்துரையாடல் மட்டத்தில் காணப்படுவதுடன் முகாமைத்துவ திணைக்களத்தின் அங்கீகாரம் தற்சமயம் கிடைக்கப்பெற்றுள்ளது.

சிவில் விமானசேவை அதிகாரசபையில் நிதியியல் தகவல் கணக்கெடுப்பு மற்றும் முன்வைத்தல் வினைத்திறன் மற்றும் மிகவும் திருத்தமான முறையில் மேற்கொள்வதற்காக 2012 வருடத்தில் தகவல் தன்னியக்க தொகுதியின் கீழ் நியமிப்பதற்கு முடிவு செய்யப்பட்டது. அதற்கிணங்க இப்போதைக்கு நிதி முகாமைத்துவ நடவடிக்கைகள் தன்னியக்க தொகுதியின் மூலம் மேற்கொள்ளப்படும். பல்வேறுபட்ட தரவுகள் மற்றும் தகவல்களுடன் இணைந்து செயலாற்றும் இயலுமை இந்த தொகுதியில் காணப்படுகின்றது. அதேபோல தரவுகளைச் சேகரித்தல் மற்றும் பகுப்பாய்வு, தாபனத்தின் வேறு பிரிவுகள் மூலம் வெளியிடப்படும் கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்களுடன் கணினி மூலம் நேரடியாக தொடர்படும் இயலுமை போன்ற நிதிப்பிரிவினால் மேற்கொள்ளப்படும் முதலீட்டு அறிக்கைகளைத் தயாரித்தல், சம்பளக் கொடுப்பனவு, கொடுப்பனவுகளை கணக்கெடுத்தல் சரக்கு ஆவணங்களைத் தயாரித்தல் போன்ற அனைத்து நடவடிக்கைகளும் கணினி மயப்படுத்தி வினைத்திறனான முறையில் மேற்கொள்ளப்படும்.

மேலும் சிவில் விமானசேவை அதிகாரசபை எதிர்கால சிவில் விமானசேவையிற்கு தேவையான ஆள்புலத்தினை விருத்தி செய்வதற்கு தேவையான கருத்திட்டத்தினை தொடங்கியுள்ளது. சிவில் விமானசேவைத் துறைத் தொடர்பான அறிவு பாடசாலை சிறார்கள் மத்தியில் விநியோகிப்பதற்காக சிவில் விமானசேவை அபிவிருத்தி மற்றும் மற்றும் கல்விக் குழு நிறுவப்பட்டது. மீளாய்விறகு உட்படும் காலப்பகுதிக்குள் விமானசேவைத் துறைத் தொடர்பாக சிறார்களை விழிப்புணர்த்தும் 16 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன. சிறார்களது அறிவை மேம்படுத்தும் நோக்கில் சிவில் விமானசேவை அதிகாரசைபயில் அச்சிடப்படும் ‘‘குவன்சர’’ காலாண்டு கல்வி தொடர்பான சஞ்சிகை உயர்தரம் வகுப்புக்களை நடாத்தும் 3100 பாடசாலைகளுக்காக இடையறாது இலவசமாக வழங்கப்படுகின்றன.


மத்தளை இராஜபக்ஷ சர்வதேச விமானநிலைய நிர்மாணிப்புடன் கையளிக்கப்பட்டுள்ள கடமைகள் மிகவும் வினைத்திறன் மற்றும் அயராது நிறைவேற்றுவதற்காக தேவைப்படும் நிறுவனத்தின் கிளை அலுவலகம் மத்தளை இராஜபக்ஷ விமானநிலைய வளாகத்தில் நிர்மாணிப்பதற்கு முடிவு செய்யப்பட்டது. இவ்வருடத்தின் ஜுன் மாதம் ஆரம்பிக்கப்பட்ட நிர்மாணப் பணிகள் 2013 திசெம்பர் மாதம் பூர்த்தி செய்யப்பட்டது.


அதேபோல சிவில் விமானசேவை அதிகாரசபையிற்குரிய பிரதான கட்டிடம் கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலைய வளாகத்தில் நிர்மாணிப்பதற்காக முடிவு செய்யப்பட்டது. இவ்வருடத்தில் ஜுன் மாதம் ஆரம்பிக்கப்பட்டதுடன் நிர்மாணப் பணிகள் 2013 திசெம்பர் மாதம் பூர்த்தி செய்யப்பட்டது.


அதேபோன்று சிவில் விமானசேவை அதிகாரசபையிற்காக பிரதான கட்டிடம் கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலைய வளாகத்தில் நிர்மாணிப்பதற்குத் தேவையான அடிப்படை நடவடிக்கைகள் இப்போதைக்கு ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

## இலங்கை சிவில் விமானசேவை அதிகாரசபை
## 2013 திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த வருடத்துக்கான
## வருமானக்கூற்று

| | 2012 | 2013 |
|---|---|---|
| **வருமானம்** | | |
| செயற்பாட்டு வருமானம் | 918,524,428.11 | 1,078,895,686.64 |
| செயற்பாட்டினால் அல்லாத வருமானம் | 70,467,194.05 | 99,816,472.46 |
| **மொத்த வருமானம்**<br><br>**செலவுகள்** | **988,991,622.16** | **1,178,712,159.10** |
| ஊழியர் செலவுகள் | 148,638,658.02 | 156,700,965.10 |
| கூட்டங்கள், கருத்தரங்குகள் மற்றும் வேலைப்பட்டறைகள் | 26,794,066.10 | 33,254,645,.02 |
| பயிற்சியளித்தல் | 20,106,117.69 | 11,269,722.26 |
| நிர்வாகம் மற்றும் ஏனைய செலவுகள் | 148,764,416.90 | 136,960,888,.79 |
| பெறுமானத்தேய்வு | 26,500,919.06 | 26,854,078.66 |
| **மொத்தச் செலவுகள்** | **370,804,177.77** | **365,040,299.83** |
| **பொது அலுவல்களிலிருந்து கிடைக்கப் பெறும் வருமானம் வரிக்கு முன்னரான இலாபம்** | **618,187,444.39** | **813,671,859.27** |
| வருமானவரி | 94,722,505.91 | 228,159,304.45 |
| **வரிக்குப் பின்னரான தேறிய இலாபம்/ (நட்டம்)** | **523,464,938.48** | **585,512,554.82** |
| மூலம்: உள்ளகப் புள்ளிவிபரம்- சிவில் விமானசேவை அதிகாரசபை | | |




மூலம்: உள்ளகப் புள்ளிவிபரம்- சிவில் விமானசேவை அதிகாரசபை

# வரையறுக்கப்பட்ட விமான நிலைய மற்றும் விமானசேவைக் (இலங்கை) கம்பனி

## செயல்நோக்கு

“ஆசிய பிராந்தியத்திலேயே செயற்திறனுடனும், சிறந்த நட்புணர்வுடனும் முதல்நிலை விமானசேவை மையமாக திகழ்தல்”.

## செயற்பணி

“நாம் அயரா உழைப்புடன் அனைத்து தொழிற்பாடுகளினூடாக போட்டியடிப்படையிலான வான் போக்குவரத்து வசதிகள் மற்றும் சேவைகளை வழங்குவதும், எமது தாபனத்தின் மீது அக்கறை காட்டும் தரப்பினர்களின் மனநிறைவினை உறுதி செய்வதேயாகும்”.

## அறிமுகம்

இலங்கை வான் பயண தகவல் பிராந்தியத்திற்குள் வானிலும், தரையிலும் ஆகாய விமானங்கள் மற்றும் பயணிகளின் பாதுகாபபினை உறுதிப்படுத்தும் தீயணைப்புச் சேவைகள் மற்றும் பாதுகாப்புச் சேவைகள் உள்ளடங்களாக வானோடல் சேவைகளை வழங்குவதும், முனையம் மற்றும் அது தொடர்பாக பயணிகளின் வசதிகள் ஏற்படுத்தும் நடவடிக்கைகள் பராமரித்தலும் கம்பனியின் அடிப்படைச் செயற்பாடுகளாகும்.

நியதிச் சட்ட சேவை வழங்குநராக கம்பனியின் நிதி மற்றும் இலங்கை அரசினால் அங்கீகரிக்கப்பட்ட வெளிநாட்டுக் கடன்கள் மற்றும் மானியங்களை் ஈடுபடுத்தி விமானநிலையத்தின் உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

### நிறுவனத்தின் நோக்கங்கள்

- இடைநிற் பயணிகளின் எண்ணிக்கை மொத்த பயணிகளின் எண்ணிக்கையின் விகிதம் நிகழ்காலத்தில் 1:6 இலிருந்து 2016 ஆம் ஆண்டில் 1:4 வரை அதிகரித்து பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம் ஆசியா போரொழிப்பு பிராந்தியத்தினுள் பயணிகள் இடைநிற் மையமாக உருவாக்குதல்.
- 2017 ஆகும்போது 15 மில்லியன்கள் பயணிகள் எண்ணிக்கை கையாளக்கூடிய கொள்ளளவிலான உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதல்
- 2012 ஆம் ஆண்டைப்போல் 2017 ஆம் ஆண்டாகும்போது பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தில் தரையிறங்கும் விமானமொன்றுக்கு வழங்கப்படுகின்ற சேவைகளுக்காக ஏற்கப்படுகின்ற செலவினங்களில் 10% இனை குறைத்தல்.
- 2017 ஆகும்போது கையாளப்படும் வான் பயணிகளின் அளவு 10 மில்லியன்கள் வரை அதிகரித்தல்.
- 2017 ஆகும்போது மொத்த வான் சரக்கு அளவிலிருந்து (பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம் மற்றும் மத்தளை இராஜபக்ஷ விமானநிலையம்) 40% இடைவழி சரக்குகளாக மாற்றியமைத்தல்.
- சிவில் விமானசேவை பயிற்சி நிலையத்தினுள் பிராந்திய ரீதியிலான ஒத்துழைப்பு 10% இனால் அதிகரித்துக்கொள்ளுதல்.
- பிராந்தியத்தினுள் படிநிலைகளை உயர்துவதற்குரிய நிலைமைகளை பேணுதல்.(நிகரான கொள்ளளவின்படி படிநிலைப்படுத்தும்போது)
- ஆகாயவிமான நிகழ்வுகளில் தரையிறக்கும் நடைமுறையினை பேணுதல்.
- சர்வதேச சிவில் விமானசேவை அமைப்பினால் (ICAO) வெளியிடப்பட்டுள்ள ஆவண இலக்கம் : 8973 இன் பிரகாரம் சர்வதேச சிவில் விமானசேவையில் பாதுகாப்பினை உறுதிப்படுத்துதல்.

- முக்கிய தொழிற்பாட்டு நடவடிக்கையினுள் நுகர்வு மற்றும் நிதி தொலைநோக்கு அளவைகளுக்காக 20% வீதத்தினை பேணப்பட்டு, விமானநிலையத்துடன் தொடர்புடைய அனைத்து தாபனங்கள் மற்றும் இணைந்த சேவைகளை வழங்குதல், மதிப்பாய்வு செய்தல் மற்றும் தொழிற்பாடுகளை சிறந்த முறையில் தொடர்ந்தும் மேற்கொள்ளுதல்.

## 2013 இல் பௌதீக முன்னேற்றம்

**பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம்**

தொழிற்பாட்டு மட்டங்களின் திடீர் உயர்வு மற்றும் அதன் பெறுபேறுகளாக அமைந்த வான் நெரிசற் நகர்வுகளுடன் ஒட்டுறவினைக் காட்டுகின்ற வருமானங்கள் மற்றும் சம்பாத்தியங்கள் உயர்வடைந்ததன் காரணமாக ஏற்பட்ட உற்சாகத்துடன் 2013 ஆம் வருடத்தில் விமானநிலைய மற்றும் விமானசேவைக் கம்பனி சிறந்த வெற்றியினை வெளிக்காட்டியது.

வான் நெரிசற் புள்ளிவிபரங்களின் நகர்வுகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளதுடன் கம்பனி, வாக்களிக்கப்பட்ட நிதியம், பிடித்துவைக்கப்பட்ட நிதியம் போன்ற நிதி அறிக்கைகளினால் உள்ளடங்கப்பட்ட ஒருங்கிணைக்கப்பட்ட நிதி அறிக்கைகளில் முக்கிய நிதிக் கூற்றுக்களின் இந்த தொழிற்பாட்டுத் தரவுகள் எவ்வாறு காட்டப்படுகின்றதென்பதை இந்த அறிக்கையில் காட்டப்படும்.

### மத்தளை இராஜபக்ஷ சர்வதேச விமான நிலையம் (எம்.ஆர்.ஐ.ஏ)

விமானசேவைக் கம்பனி என்ற வகையில் தாபன வாழ்க்கை வட்டத்தின் ஆரம்ப கட்ட நிலையில் காணப்படும் மத்தளை இராஜபக்ஷ சர்வதேச விமான நிலையம் ஏற்கனவே வான் பயணத் தடவைகள் மற்றும் பயணிகள் பயணத் தடவைகள் என்ற இரண்டிலும் துரித வளர்ச்சி காட்டுகின்றது. வான் நெரிசல் தரவுகள் பின்வருமாறு காட்டப்பட்டுள்ளன.தேசிய விமானசேவை, ப்ளய் டுபாய் மத்தளை இராஜபக்ஷ சர்வதேச விமான நிலையம் மற்றும் மேலும் பல சர்வதேச விமானநிலையங்களுடன் ஒருங்கிணைந்த வாராந்த வான் தொழிற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்படுவதுடன், நாட்டின் உள்ளக வான் தொழிற்பாடுகள் அத்துடன் நடைமுறைப்படுத்தப்படும்.

### வான் போக்குவரத்துத் தரவுகள் (வானூர்தி, பயணிகள், மற்றும் வான் சரக்கு நகர்வுகள்)

**பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம்**

பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலைய 2013 காலப்பகுதியில், 50,802 வானூர்திகளை (48,646 கால அட்டவணைப்படுத்தப்பட்ட வானூர்திகள், 2,156 கால அட்டவணைப்படுத்தப்படாத வானூர்திகள்) கையாளப்பட்டுள்ளன. இது 2012 உடன் ஒப்பிடுகையில் 5% அதிகரிப்பினை பதிவாக்கியுள்ளது.

1,359,328 இடைநிற் பயணிகள் உள்ளடங்கலாக 7,311,869 பயணிகள் (3,682,599 வெளிச் செல்லும் பயணிகள் மற்றும் 3,629,270 உள்வரும் பயணிகள்) விமான நிலையத்தினை உபயோகித்ததுடன், இது 2012 உடன் ஒப்பிடுகையில் 3.27% வளர்ச்சியொன்றைப் பதிவாக்கியுள்ளது.

குறித்த காலப்பகுதியில் கையாளப்பட்ட மொத்தச் வான் சரக்குகள் அளவுகள் 193,975 மெற்றிக் தொன்களாகும். (ஏற்றுமதி செய்யப்பட்ட 122,019 வான் சரக்குகள் மெற்றிக் தொன்கள் மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட 71,956 மெற்றிக்தொன்கள் சரக்குகளையும்) இது கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 3.94% அதிகரிப்பொன்றாக அமைகின்றது.

## <u>மத்தளை இராஜபக்ஷ சர்வதேச விமான நிலையம்</u>

மத்தளை இராஜபக்ஷ சர்வதேச விமானநிலையம் 2013 காலப்பகுதிக்குள் (அதாவது 18 மார்ச் 2013 முதல் 31 டிசம்பர் 2013 காலப்பகுதிக்குள்) 1,362 வானூர்திகள் கையாளப்பட்டன.

இக் காலப் பகுதியில், (2013 மார்ச் மாதம் 18 ஆந் திகதியிலிருந்து திசெம்பர் 31 ஆந் திகதி வரை) விமான நிலையமானது 10,938 இடைநிற் பயணிகள் உள்ளடங்கலாக 36,137 பயணிகளால் (22,853 வெளிச் செல்லும் பயணிகள் மற்றும் 13,284 உள்வருகைப் பயணிகள்) பயன்படுத்தப்பட்டன.

குறித்த அதே காலப்பகுதியில் கையாளப்பட்ட மொத்த வான் சரக்கானது 64.4 மெற்றிக்தொன்களாகும் (ஏற்றுமதி செய்யப்பட்ட 27 மெற்றிக்தொன்கள் மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட 37.4 மெற்றிக்தொன்கள்) காணப்படுகின்றது.

## பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் நவீனமயப்படுத்தும் கருத்திட்டமும் மத்தளை இராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தின் முன்னேற்றமும்

பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலைய அபிவிருத்தி 2 ஆம் கட்டத்தின் 2 ஆம் நடவடிக்கை தொழிற்பாட்டின் நிதியியல் முன்மொழிவுகள் தொடர்பாக விலைமனுதாரர்களுடன் கலந்துரையாடி முடிவு செய்யப்பட்டுள்ளது. அமைச்சரவைப் பத்திரத்தினை சமர்ப்பித்து, ஒப்பந்தங்களை நடைமுறைப்படுத்துவதற்குரிய அங்கீகாரத்தினை எதிர்ப்பார்த்து இருப்பதுடன் ஆரம்ப கட்ட சோதனைகளுக்காக ஒப்பந்த பத்திரங்கள் JICA இற்கு கையளிக்கப்பட்டுள்ளது.

ஆண்டொன்றிற்கு மேலதிகமாக 9 மில்லியன் பயணிகளை கையாளக்கூடியவாறு பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலைய அபிவிருத்தி 2 ஆம் கட்டத்தின் 2 ஆம் நடவடிக்கை ஜப்பான் அரசாங்கத்தின் (GOJ) ஒத்துழைப்புடன் நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படும். இதன் பிரகாரம், பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலைய அபிவிருத்தி 2 ஆம் கட்டத்தின் 2 ஆம் நடவடிக்கையிற்குத் தேவையான நிதி, அரச அபிவிருத்தி உதவிகள் (ODA) ஊடாக கடனாக வழங்குவதற்கு ஜப்பான் அரசு உறுதியளித்துள்ளது. கடன் நிதி தொடர்பான உடன்படிக்கை 2012 மாரச் மாதம் கைச்சாத்திடப்பட்டதுடன்,

மீதியாகவுள்ள நிதியைப் பெற்றுக் கொள்வதற்கான விண்ணப்பம் தேசிய திட்டமிடல் திணைக்களத்திற்கு பொறுப்பளித்துள்ளது.

புதிய முனையக் கட்டிட வேலைகளின் பூர்த்தியுடன், பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின் வருடாந்த மொத்த திரட்டிய வான் பயணிகளின் இயலளவானது 15 மில்லியன்களாகும். கருத்திட்டம் 2017 ஆம் ஆண்டில் முடிவுக்குக் கொண்டுவருவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

## மத்தளை ராஜபக்ஷ சர்வதேச விமான நிலைய அபிவிருத்தி கருத்திட்டத்தின் 1 ஆவது கட்டத்தின் வளர்ச்சி

### வான் தொழிற்பாடுகளின் ஆரம்பம்

வருடத்தின் முதல் அரையாண்டுப் பகுதியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மத்தளை, அம்பாந்தோட்டைப் 2ஆவது சர்வதேச விமான நிலையத்தின் செயற்பாடுகளை ஆரம்பிப்பதில் நாம் பிரதானமாக கவனம் செலுத்தினோம். மத்தளை ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையம் **2013 மார்ச் மாதம் 13 ஆந் திகதி** மேன்மை தங்கிய சனாதிபதி மகிந்த இராஜபக்ஷ அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. விமானநிலையம் ஆரம்பிக்கப்பட்ட திகதியிலிருந்து 31 டிசம்பர் 2013 வரையில் தொழிற்படுத்தப்பட்ட அனைத்து சர்வதேச வான் பயணங்கள், விமானப் பயணிகள் மற்றும் வான் சரக்குகள் தொடர்பான தகவல்கள் மேலே இவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கருத்திட்டத்திற்குத் தேவைப்படும் ஐக்கிய அமெரிக்க டொலர்கள் 190 மில்லியன் கடன் தொகை சீனாவில் எக்ஸிம் வங்கியால் வழங்கப்பட்டதுடன், மொத்த ஒப்பந்தப் பெறுமதி 209 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களில் எஞ்சிய தொகையானது விமானசேவைக் கம்பனியில் ஏற்கப்பட்டுள்ளது. மத்தளை இராஜபக்ஷ சர்வதேச விமானநிலையத்தின் 1 ஆவது கட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட பிரதான பகுதிகள் கீழே தரப்படுகின்றன.

### விமான ஓடுபாதை, விமான நடையோடுபாதை, மற்றும் விமானத் தரிப்பிடப் பகுதி அபிவிருத்தி

இவ் விமான நிலையத்தின் ஓடுபாதையானது 4F (A380) ரக விமானங்களைக் கையாளும் இயலுமைகளைக் கொண்டுள்ளது. இவ் விமான ஓடுபாதையின் நீளம் மற்றும் அகலம் முறையே 3,500மீ, மற்றும் 75 மீட்டர் ஆகும். இந்த விமானநிலைய தரிப்பிடம் 10 விமானங்களை நிறுத்தக் கூடியதாக அமைக்கப்பட்டுள்ளது. விமான ஓடுபாதையின் 22 முனையத்திலிருந்து 1.5 கிலோமீற்றர் மற்றும் 1 கி.மீ. தூரம் அளவிலான துணை இரண்டு விமான நடையோடுபாதைகளால் விமான ஓடுபாதை மற்றும் விமானங்களை நிறுத்தும் தரிப்பிடத்தினை தொடர்படுத்தியுள்ளன.

## பயணிகள் முனையக் கட்டடம்

நவீன தொழில்நுட்ப ஆற்றல் வினைத்திறன் வாய்ந்த முறையில் வடிவமைக்கப்பட்ட பயணிகள் முனையக் கட்டிடமானது வான் பயண பாலங்கள், பயணப் பொதி கையாள்கை முறைமை, பயணிகள் மற்றும் பொதிகள் திரையிடல் முறைமை, பாரம் தூக்கி, நகரும் படிகள், விமான தகவல் தொகுதி, மற்றும் முனைய உபகரணங்கள் போன்ற சர்வதேச வசதிகளால் ஆனது. மேலும் இவ் விமான நிலையமானது எதிர்கால விரிவாக்கத்திற்கு வசதியளிக்கும் பொருட்டு நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

**வான்வழிப் பயணச்சேவை கட்டுப்பாட்டுக் கோபுரம் மற்றும் வானோடல் கருவிகள்**

45 மீட்டர் உயரம் கொண்ட வான்வழிப் பயணச்சேவை கட்டுப்பாட்டுக் கோபுரம் விமான நிலையத்தின் பிரதான அம்சங்களில் ஒன்றாகும். பாதுகாப்பான வானூர்தி நகர்வுகளின் தேவைப்பாடுகளுக்காக வானிலிருந்து தரை மற்றும் வானிலிருந்து விமானங்கள் தொடர்படும் விதத்தில் அனைத்து தொடர்பாடல் மற்றும் வானோடல் கருவிகள் பொருத்தப்பட்டு நிலைநிறுத்தப்பட்டுள்ளன.

**வான் சரக்கு முனையம்**

இந்த முனையம் வருடமொன்றிற்கு 50,000 மெ.தொ கொள்ளளவிலான சரக்குளைக் கையாளக் கூடியதாக அமைக்கப்பட்டுள்ளது. இச் சரக்குக் கட்டடத்தினுள் தாவரங்கள், மிருக தொற்றுத்தடைகாப்பு வசதிகள் மற்றும் குளிர் களஞ்சியம் என்பன காணப்படுகின்றன.

**தீயணைப்புப் பிரிவு முனையம்**

நவீன இரு மாடிகளைக் கொண்ட தீயணைப்பு சேவை நிலையங்கள் நிலைநிறுத்தப்பட்டுள்ளது. இக் கட்டடமானது தீ கண்காணிப்புக் கோபுரம், ஐந்து தீயணைப்பு இயந்திரங்கள், மற்றும் தரிப்பிட வசதிகளை உள்ளடக்குகின்றது.

மத்தளை இராஜபக்ஷ சர்வதேச விமானநிலையம் வகையினம் 10 இற்குரிய தீயணைப்பு வசதிகளை கொண்டுள்ளது.

**ஏனைய வசதிகள்**

கூம்பக வடிவத்தினாலான 30 மீட்டர் உயரங்கொண்ட 300 மீட்டர் கனவடி கொண்ட நீர் கொள்ளளவு சேமித்து வைக்கக்கூடிய நீர் கோபுரம், 200M கனவளவு கொண்ட தரை சுரங்கம், கழிவுநீர் மற்றும் திண்ம பொருட்களை அகற்றும் தொகுதி என்பன நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

**அரச தலைவர்களுக்கான பொதுநலவாய மாநாட்டுச் செயற்பாடுகள்**

இலங்கையில் நடைபெற்ற அரச தலைவர்களுக்கான பொதுநலவாய மாநாட்டுச் செயற்பாட்டுக் காலப்பகுதியில், இலங்கைக்கு வருகைத்தந்த மற்றும் இலங்கையிலிருந்து வெளியேறிய அனைத்து அரச தலைவர்கள் மற்றும் அரச பிரதிநிதிகள் திருப்திகரமான

முறையில் பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தினூடாக வழிநடாத்தப்பட்டனர். 7,000 க்கும் மேற்பட்ட அரச பிரதிநிதிகள் மற்றும் 34 நாடுகளது அரச தலைவர்கள் இவர்கள் மத்தியில் காணப்பட்டனர். பயணிகள் வசதி, தகவல் தொடர்புசாதன குழு, உயர் அரச தலைவர்கள் மற்றும் உயர் அரச பிரதிநிதிகளுக்கான வசதிகளை ஏற்படுத்துவதற்கு வருகை முனையத்தில் 5 தகவற் தளங்கள், வெளிச்செல்கை முனையத்தில் 2 தகவற் தளங்கள் அமைக்கப்படும். பொதுநலவாய அரச தலைவர்கள் மாநாட்டுக் காலங்களில் சில்க் வழிப்பாதையானது கிளம்பும் பிரதிநிதிகளுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. மேலும், மத்தளை இராஜபக்ஷ சர்வதேச விமானநிலையம் மற்றும் இரத்மலானை விமானநிலையத்தினால் மத்தளை, யாழ்ப்பாணம், இரணைமடு, மற்றும் கண்டி போன்ற பல்வேறு உள்நாட்டு சேரிடங்களுக்காக விஜயம் செய்த உயர் அரச தலைவர்கள் மற்றும் உயர் வெளிநாட்டுப் பிரதிநிதிகளுக்கு நேர்த்திவாயந்த மற்றும் பயண சேவைகள் வழங்கப்பட்டன. சுகாதார அமைச்சுடன் ஒன்றிணைந்து நாட்டிலுள்ள அனைத்து சிவில் விமான நிலையங்களுக்கும் பரந்த முறையில் உயர் மற்றும் உயர் அரச தலைவர்களுக்குத் தேவைப்படும் அனைத்து வைத்திய வசதிகள் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தன. விமானநிலைய மற்றும் விமானசேவை கம்பனியிற்கு ஏதேனும் இக்கட்டான நிகழ்வாக இருப்பினும், உயர் மற்றும் வினைத்திறனுடன் முகாமைத்துவம் செய்ய முடியுமென அரச மற்றும் அரச பிரதிநிதிகளால் பராட்டம் பெற்றது.

## நகர விமான நிலையமாக இரத்மலானை விமான நிலைய அபிவிருத்தி

### உள்நாட்டுச் செயற்பாடுகள்

தற்போது உள்நாட்டுப் பறப்புக்களானவை பி(f)ற்ஸ் எயார், ஹெலி ருவர்ஸ், மிலேனியம் எயார்லைன்ஸ், கொஸ்மொஸ் ஏவியேஷன், செனொக் ஏவியேஷன், ஏஷியன் ஏவியேஷன், மற்றும் த(d)யா ஏவியேஷன் என்பனவற்றால் முன்னெடுக்கப்படுகின்றன. 2013 இல் லக்வின் ஏவியேஷன் என்னும் புதிய எயார்லைன்ஸ் செயற்பாட்டாளர் இரத்மலானை விமான நிலையத்தில் உள்நாட்டுச் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு விமானத்தரிப்பிடப் பயன்பாட்டிற்கென விமானநிலைய மற்றும் விமானசேவைக் கம்பனியுடன் உடன்படிக்கைகளை கைச்சாத்திட்டனர்.

### சர்வதேச செயற்பாடுகள்

தளக் கையாள்கை, சுங்கம், குடிவரவு மற்றும் குடியகல்வு, மற்றும் தொடர்புபட்ட சேவைகள் போன்ற உட்கட்டமைப்பு வசதிகள் உள்ளடக்கப்பட்ட கொழும்பு விமான நிலையம் தற்போது சர்வதேச கூட்டிணைக்கப்பட்ட துரித (ஜெட் ரக) விமானங்களை தொழிற்படுத்துவதற்காக திறக்கப்பட்டுள்ளது. 2013 இல், விமானநிலைய மற்றும் விமானசேவைக் கம்பனியானது தளக் கையாள்கை தொடர்பாக இரத்மலானை விமான நிலையத்தில் உள்நுழையும் அனைத்து சர்வதேச கூட்டிணைக்கப்பட்ட ஜெட் விமானங்களுக்கும் தள வசதிகளை வழங்குவதற்கு இணங்கியுள்ளனர்.

## 2013 இல் விமானநிலை அபிவிருத்தி

1939 இல் நிர்மாணிக்கப்பட்ட இரத்மலானை விமான நிலைய பழமைமிக்க கட்டடமானது பல தசாப்தங்களுக்குப் பின்னர் புதுப்பிக்கப்பட்டுள்ளதுடன், வரலாற்று ரீதியிலான தோற்றத்தினை பாதுகாக்கும் வகையில் புதிய முகப்புத் தோற்றம் வழங்கப்பட்டுள்ளது. புதிய முனையக் கட்டடமானது பயணிகள் கைப்பற்றும் பிரதேசம், புற முகப்பு, வான் மேற்கட்டுவரை பரந்துள்ள இடவசதிகளாலான வான்வழிப் பக்கங்களாலானது. என்பனவற்றில் பயணிகளின் தேவைகளை நிறைவு செய்யும் பொருட்டு மேலதிக பிரதேசங்கள் நவீனமயப்படுத்தப்பட்டுள்ளன.

மேலும், புதிய கட்டமைப்பானது அதி நவீன முக்கிய பிரமுகர் ஓய்வறை, மிக முக்கிய பிரமுகர் ஓய்வறை, முக்கிய பிரமுகர் முகப்பு அறை மற்றும் சீர்திருத்தங்களாலான விமானநிலையம், எவ்வாறானதொரு பயணிகள் அசைவுகளையும் எச்சந்தர்ப்பத்திலும் கையாளக்கூடிய வகையில் அமைக்கப்பட்டுள்ளது..


**விமானநிலைய மற்றும் விமானசேவை (இலங்கை) கம்பனி**

வருமானக் கூற்று ரூபா.மில்லியன்களில்


| விபரம் | 2013 கணக்காயவுக்கு உட்படுத்தப்படவில்லை | 2012 கணக்காய்வு செய்யப்பட்டது. |
|---|---|---|
| **வருமானங்கள்** | | |
| வானூர்திகள் மூலமான வருமானங்கள் | 2,855 | 2,574 |
| வானூர்திகள் மூலமல்லாத வருமானங்கள் | 1.252 | 1,103 |
| வாடகை வருமானங்கள் மற்றும் சலுகைக் கட்டணங்கள் | 4,903 | 4,682 |
| கப்பலேற்றும் தீர்வைகள் | 3,205 | 2,328 |
| தொழிற்பாடுகள் அல்லாத (நட்டம்) /இலாபம் | (72) | 426) |
| மொத்த இயலளவு வருமானம் | **12,143** | 11,114 |
| **செலவுகள்** | | |
| பதவியணியினரது செலவுகள் | 4,156 | 3,515 |
| தாபன மற்றும் நிர்வாகச் செலவுகள் | 2,563 | 1,289 |
| பராமரித்தலும் பேணுதல் செலவுகளும் | 411 | 205 |
| பெறுமானத் தேய்வுகள் | 2,120 | 1,011 |
| மொத்த செலவுகள் | **9,250** | **6,020** |
| தொழிற்பாட்டு இலாபம் | 2,893 | 5,094 |
| தேறிய நிதி வருமானம் / (செலவு) | 512 | (1,439) |
| கடன் மீதான வெளிநாட்டு நாணய பரிமாற்று இலாபம் /(நட்டம்) | 1,806 | (1,439) |
| வரிக்கு முன் இலாபம் | **5,212** | **4,064** |
| கழிப்பனவுகள் : வருமான வரி | (761) | (1,121) |
| **வரிக்கு பின் இலாபம்** | **4,451** | **2,943** |

மூலம்: உள்ளகப் புள்ளிவிபரம்- விமானநிலைய மற்றும் விமானசேவை (இலங்கை) கம்பனி


| **விமானங்களின் அசைவுகள்** | | |
|---|---|---|
| | | |
| | **2013** | **2012** |
| சனவரி | 4,230 | 4,156 |
| பெப்ருவரி | 3,816 | 3,876 |
| மார்ச் | 4,218 | 4,048 |
| ஏப்ரல் | 4,002 | 3,832 |
| மே | 4,196 | 3,922 |
| ஜூன் | 4,104 | 3,874 |
| ஜூலை | 4,326 | 4,094 |
| ஓகஸ்ட் | 4,394 | 4,232 |
| செப்ரெம்பர் | 4,182 | 4,000 |
| ஒக்டோபர் | 4,396 | 4,190 |
| நொவெம்பர் | 4,334 | 3,994 |
| திசெம்பர் | 4,604 | 4,198 |
| | **50,802** | **48,416** |



| பயணிகள் அசைவுகள் | | |
|---|---|---|
| | **2013** | **2012** |
| சனவரி | 643,234 | 602,010 |
| பெப்ருவரி | 583,249 | 558,826 |
| மார்ச் | 610,150 | 595,441 |
| ஏப்ரல் | 585,104 | 579,872 |
| மே | 579,448 | 561,350 |
| ஜான் | 583,731 | 570,231 |
| ஜுலை | 612,323 | 611,582 |
| ஓகஸ்ட் | 688,600 | 647,589 |
| செப்ரெம்பர் | 586,628 | 569,427 |
| ஒக்டோபர் | 606,953 | 590,627 |
| நொவெம்பர் | 566,284 | 554,095 |
| திசெம்பர் | 666,165 | 638,870 |
| | **7,311,869** | **7,079,920** |



| வான் சரக்குத் தொழிற்பாடுகள் (மெ.தொ) | | |
|---|---|---|
| | 2013 | **2012** |
| சனவரி | 14,806 | 13,906 |
| பெப்ருவரி | 14,558 | 14,156 |
| மார்ச் | 18,228 | 17,051 |
| ஏப்ரல் | 15,162 | 15,050 |
| மே | 15,932 | 15,875 |
| ஜூன் | 16,162 | 16,005 |
| ஜூலை | 17,544 | 17,243 |
| ஓகஸ்ட் | 16,323 | 15,945 |
| செப்ரெம்பர் | 16,131 | 15,056 |
| ஒக்டோபர் | 16,783 | 15,556 |
| நொவெம்பர் | 16,405 | 14,869 |
| திசெம்பர் | 15,941 | 15,906 |
| | **193,975** | **186,618** |



# வரையறுக்கப்பட்ட சிறிலங்கன் விமானசேவைக் கம்பனி

**தொனிப்பொருள்**

''ஆசியாவில் மிகவும் விரும்பப்படும் விமானசேவையாக திகழ்வது''

**செயற்பணி**

''நாம் பிரயாணிகள் மற்றும் சரக்குப் போக்குவரத்தில் ஈடுபட்டிருப்பதுடன், எமது வாடிக்கையாளர்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமான வகையில் சிறந்த அனுபவங்களினைப் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பையும் ஏற்படுத்தியிருக்கிறோம். எமது தொழில்துறை வாடிக்கையாளர்களுக்கு அதி நவீன மற்றும் தொழில்சார் ரீதியில் உயர்ந்த இலாபத்தை ஈட்டித் தரக்கூடியதுமான சேவையினை வழங்குகின்றோம். எமது பங்குதாரர்களின் எதிர்பார்ப்பிற்கு பாத்திரமாகும் வகையில் இலாபம் தரக்கூடிய சேவையினை வழங்குகின்றோம். எமது பங்குதாரர்களின் எதிர்ப்பார்ப்பான இலாபம் உழைப்பதனை நோக்காகக் கொண்டு நாம் இலங்கையிற்குள்ளே உல்லாசப் பயணிகளின் போக்குவரத்து மேம்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொண்டு வருவது மட்டுமல்லாது சமுதாயத்தின் நலனோப்பாயத்திற்காகவும் உழைத்து வருகின்றோம். எம் மத்தியில் வினைத்திறன் மிக்க ஆர்வமுள்ள குழுவொன்று செயலாற்றி வருவதுடன், உல்லாசக் கைத்தொழிலுக்கு நம்மால் காட்டிய ஒத்துழைப்பு நன்மதிப்புக்கும் மற்றும் புகழ்ச்சிக்கு பாத்திரமானதாகியுள்ளது.''

**நோக்கங்கள்**

- இலங்கை அரசின் கொள்கைகளுக்கு இயைவாக நெருங்கிய ஒத்துழைப்புக்களை வழங்கி உள்நாட்டு பொருளாதாரத்தினைக் கட்டியெழுப்பி இலங்கை மற்றும் சிறிலங்கன் விமானசேவை உலகம் பூராவும் பிரபல்யப்படுத்துதல்.
- மகிந்தவின் சிந்தனை தொலைநோக்கு நிகழ்ச்சித்திட்டத்தில் குறிப்பிட்டுள்ளவாறு, வாணிப தொழிற்பாடுகள் மற்றும் அறிவு துறையின் குவியமாக இலங்கை விமானசேவைகள் கைத்தொழிலினை அபிவிருத்தி செய்தல்.
- உள்நாட்டு சுற்றுலாக் கைத்தொழிலின் அபிவிருத்தி செயற்பாடுகளை வழிநடாத்தும் வினையூக்கியாக செயல்படுதல்.
- கைத்தொழில் துறையின் அதியுன்னத சேவையிற்கு நிகரான தரங்களுடான சேவைகளை வழங்குதல்.
- ஏற்றுமதி மற்றும் இறக்குமதி இரு பகுதிகளையும் உள்ளடங்கிய உள்நாட்டு சரக்குக் கைத்தொழிலுக்கு உதவியாக இருத்தல்.
- பொருளாதார அபிவிருத்தி அமைச்சு, இலங்கை சுற்றுலாக் கைத்தொழில் மற்றும் விமானநிலைய, விமானசேவைகள் (சிறிலங்கா) கம்பனி போன்றவை உள்ளடக்கப்பட்ட ஏனைய பிற அரச நிறுவனங்களினால் மேற்கொள்ளப்படுகின்ற செயற்பாடுகளுக்கு உதவுதல்.
- தொழிற்பாட்டிற்காக உறுதியான உலகளாவிய ரீதியில் பரவலாக்கப்பட்ட விமானப் பயணசேவை வலையமைப்பினை நிறுவுதல்.

- பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின் தொழிற்பாடுகளை மேற்கொள்கின்ற விமானசேவைகளுக்கு நிலத்தள சேவைகளை வழங்குதல் மற்றும் அதன் இணைந்த நிறுவனமான சிறிலங்கன் கேட்டரினால் உணவு பானங்களை வழங்குதல
- பதவியணியினரின் விளைவுபெருக்கத்தினை அதிகரித்தல் மற்றும் நடவடிக்கைகளின் சிறப்பம்சங்களை மதிப்பாய்வு செய்தல்
- விமானசேவையில் சர்வதேச அங்கீகாரத்திற்குள்ளாகியிருக்கின்ற நட்புணர்வு, பாதுகாப்பு மற்றம் பற்றை தொடர்ந்தும் பேணுதல் மற்றும் மேம்படுத்துதல்.

## <u>பௌதீக வளர்ச்சி- 2013</u>

- **<u>வன்வர்ல்ட் (Onw World) விமானசேவைக் கம்பனிகள் சமுகம்</u>**

  சிறிலங்கன் விமானசேவைக் கம்பனி உலக பிரசித்தம்பெற்ற விமானசேவைக் கம்பனிகள் சமுகத்தில் அங்கத்துவத்தினைப் பெறுவதற்குத் தேவையான அனைத்து தகைமைகளை கொண்டுள்ளது. இதன் மூலம் விமானசேவைக் கம்பனியின் அபிவிருத்தித் திட்டத்திற்கு இலகுவானதாகவுள்ளதுடன், உலகளாவிய ரீதியில் வான் பயண வலையங்களை பரவலாக்கம் செய்து உலகம் முழுவதும் 824 புதிய சேரிடங்களுக்கு தொழிற்பாடுகளை மேற்கொள்வதற்கு இயலுமாகவுள்ளது. விமானசேவைக் கம்பனியின் பயணிகள் சேவைத் தொகுதி வன்வர்ல்ட் அமைப்பில் தரங்களுக்கு இயைவாக மாற்றம் செய்வதனூடாக அங்கத்துவ விமானசேவைகளில் பயணம் செய்யும் பயணிகளின் சுற்றுலாத் தேவைப்பாடுகளை நிறைவேற்றிக் கொள்வதற்கும் பல்வேறுபட்ட விமானசேவைகளில் தொடர்வாரியான பறத்தல் நிகழ்ச்சித்திட்டத்தின் அங்கத்தவர்களுக்கு ஏனைய அங்கத்துவ விமானசேவைகளில் பறப்பதற்கும் இதனூடாக வாய்ப்புக்கள் ஏற்படுத்தப்படும்.

- **வானறை மேம்பாடுகள்** - தட்டையான படுக்கை இருக்கைகள் (Flat Beds), உள்ளடங்களாக வியாபார வகுப்பில் வானறை நவீனமயப்படுத்துதல் மற்றும் புதிய விமான கேலிக்கைத் தொகுதி(Inflight Entertainment Systems)

- **மத்தள (MRIA) விமான நிலையச் செயற்பாடுகள்**- பயணிகளின் விமானங்களுக்காக நிலத் தொழிற்பாட்டு சேவைகளுகளை நிறைவேற்றுதல். மத்தளை இராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தில் பொறியியல் அடிப்படை பராமரிப்புச் செயற்பாடுகளை வழங்கல்

  - விமானநிலைய செயற்பாடுகளுக்காக ரூபா 766 மில்லியன்களை ஆரம்ப கட்டமாக முதலீடு செய்துள்ளது.
  - ஏறத்தாழ 450 ஊழியர்களுக்கு வேலைவாய்ப்பு, பயிற்சியளிப்பு, தொழில் உருவாக்கம்
  - உலக பிரபல்யம் வாய்ந்த பொறியியல் நிறுவனத்துடன் கூட்டு வியாபார கருத்திட்டத்துடனான பொறியியற் பராமரிப்பு மற்றும் முழுமையான வசதிகளை (Engineering Maintenance, Repair and Overall facility ) வழங்குவதனூடாக பிராந்தியத்திற்குசேவை வழங்குதல்

- உயர் விமானசேவை தொழில்நுட்ப பயிற்சி கல்வி பீடத்தினை அமைப்பதன் நிறுவுவதன் மூலம் பிராந்திய மற்றும் உள்நாட்டு மாணவர்களுக்குப் பல்வெறுபட்ட பயிற்சி நெறிகளை அறிமுகப்படுத்துதல்.
- நாடு முழுமையாகவும் பயணிகள் சேவை பிரதிநிதிகளை நியமித்தல்- நாட்டிற்குள்ளே நகரத்தினைப் போன்று கிராமத்திலும் பயணிகள் சேவை முகவர் நிலையங்கள் (PSA) நிறுவுவதனூடாக வாடிக்கையாளர்களுக்கு சேவைகளை வழங்குதல்.
- வாடிக்கையாளர் பின்னூட்டிக் கண்காணிப்பு முறைமை- (Customer Feedback System) மற்றும் Kiosks, தொலைபேசி மென் ஒருங்கு (Mobile App)இணைத்தள அடிப்படை மின்னஞ்சல் (Web Based and email) ஆய்வுகளினூடாக உடனடி வாடிக்கையாளர் ஏற்புத்தன்மைபோன்ற உடனடி சேவைகளை வழங்குவதற்கு முடியுமாகயிருத்தல்.
- A330 ரக வானூர்தி விமானிகளுக்கான இரண்டாவது மாதிரிகை விமானி பயிற்சிகளுக்காக ஈடுபடுத்துதல் சிறிலங்கன் விமானசேவைக் கம்பனியின் விமானிகள் மற்றும் பிராந்தியத்தின் ஏனைய விமானசேவை கம்பனிகளுக்காக மாதிரிகை பயிற்சி வழங்குவதனூடாக விமானசேவைக் கம்பனியிற்கு மேலதிக வருமானம் உழைப்பதற்கான இயலுமை.
- ஒடுங்கிய உடலமைப்புக் கொண்ட விமான நிறுத்துமிடம்- A320 ரக விமான நிறுத்துமிடம் கட்டுநாயக்க விமானநிலைய வளாகத்தில் நிர்மாணிப்பதனூடாக அதிக விமானங்களுக்காக வசதிகளை ஏற்படுத்துவதற்கு மற்றும் மூன்றாந் தரப்பினரது நடவடிக்கைகளுக்கு ஈடுபடுத்தப்படும்.
- வானூர்திக் குத்தகையிடுதல் - ஒடுங்கிய உடலமைப்பினைக் கொண்ட வானூர்திகளின் குத்தகைக் காலத்தை முடிவுறுத்தியுள்ள வானூர்திகளைப் புதுப்பித்தல்
- பொறியியல் உபகரணங்கள்- வானூர்திகளது பராமரித்தற் தொழிற்பாடுகளுக்குத் தேவைப்படும் பொறியியல் உபகரணங்கள் பாவனை
- கட்டுநாயக்க விமானநிலையத்திற்காக இற்கான ரம்ப் மற்றும் வான் சரக்கு உபகரணங்கள் - சிறிலங்கன் விமானசேவைக் கம்பனியிற்கு மற்றும் ஏனைய விமானசேவைகளுக்காக தேவையான தளக்கையாள்கை சேவைகளை வழங்கல்
- IT/ தொடர்பாடல் வன்பொருள் / மென்பொருள்-, IT வன்பொருள்கள் மற்றும் மென்பொருட்கள் உள்ளடங்கிய IT உபகரணங்கள் மென்பொருள் மேம்படுத்துதல் போன்றவை.

## சிறிலங்கன் விமானசேவைக் கம்பனி

ஏப்ரல் 2013 முதல் டிசம்பர் 2013 வரையான காலப்பகுதிக்கான வருமானக்கூற்று

| | ஏப்ரல் 2012 முதல் மார்ச் 2013 வரையில் மில்லியன் ரூபாக்களில் | ஏப்ரல் 2013 முதல் டிசம்பர் 2013 வரையில் மில்லியன் ரூபாக்களில் |
|---|---|---|
| வருமானம் | 119,570.90 | 88,278.63 |
| விற்பனைக் கிரயம் | (131,598.90) | (98,204.76) |
| இயலளவு இலாபம்/ (நட்டம்) | (12,027.48) | (9,926.13) |
| ஏனைய வருமானங்களும் கிடைப்பனவுகளும் | 2.544.48) | 163.03 |
| விற்பனை மற்றும் சந்தைப்படுத்தற் செலவு | (9,851.25) | (7,408.69) |
| நிர்வாகச் செலவு | (2,522.64) | (1,419.28) |
| நிதிச் செலவு | (3,138.40) | (1,419.28) |
| நிதி வருமானம் | 1,634.97 | 950.20 |
| மாற்றுவீதத்தால் ஏற்பட்ட உழைப்பு/ நட்டம் | 1,610.82 | (825.50) |
| வருமான வரிக்கு முன்னரான வருமானம் | (21,749.75) | (21,482.52) |
| வருமானவரிச் செலவீனம் | - | - |
| வருடத்திற்கான இலாபம்/ நட்டம் | (21,749.75) | (21,482.53) |
| சிறிலங்கன் உணவக தேறிய வருமானம் | 1,630.97 | 1,662.16 |
| கம்பனிக்கு இடையேயான கொடுக்கல் வாங்கல்கள் | (2,400.00) | (1,350.00) |
| குழுமத்தின் தேறிய வருமானம்/ நட்டம் | (22,518.77) | (21,170.37) |

***மூலம்: உள்ளக புள்ளிவிபரவியல்- வரையறுக்கப்பட்ட சிறிலங்கன் விமானசேவைக் கம்பனி***

# வரையறுக்கப்பட்ட மிகின் லங்கா (தனியார்) நிறுவனம்

**<u>நோக்கு</u>**

"தேசிய விமானசேவை நிறுவனத்துடன் கூட்டிணைந்து செயலாற்றி, பிராந்தியத்தினுள்ளே இரண்டாந் தர சிறந்த விமான சேவை நிறுவனமாக உருவாக்குதல்."

**<u>பணி</u>**

"மேல்மட்ட பாதுகாப்பு தரங்களின் கீழ் செலவினங்களைக் கட்டுப்படுத்தி விளைவுபெருக்கம் கொண்ட தொழிற்பாடுகள் மற்றும் பெறுமதியினை அடிப்படையாகக் கொண்டு வாடிக்கையாளருக்கு வழங்கும் சேவையினூடாக இலாபம் மற்றும் அபிவிருத்தியினை மேம்படுத்துதல்".

**<u>குறிக்கோள்</u>**

பயணிகளுக்கு குறைந்த செலவில் அதிக வினைத்திறனுடனும், மற்றும் தொழில்சார் ரீதியில் பூரணத்துவம் பெற்ற விருந்தோம்பல்மிக்க வான் பயணங்களில் ஏற்படுத்துதல்.

**பௌதீக வளர்ச்சி- 2013**

மிகின்லங்காவானது குறைந்த பயணச் செலவீனத்துடன் பயணிக்களை கவரக்கூடிய கூடிய வான்மார்க்க பயண நிறுவனமொன்றாக 2013 இல் இடம்பிடித்துள்ளது. ஏனைய வருடங்களுடன் ஒப்பிடும் போது இவ் வருடம் பயண செலவீனத்தை மேலும் குறைத்த போதிலும் இலங்கையில் முன்னணி வகிக்கும் நிறுவனமாக திகழ்கின்றது. மிகின் லங்காவில் பயணிக்கும் பயணிகள் மற்றும் உல்லாசப் பயணிகளின் துரித வளர்ச்சியுடன் இலங்கையின் பொருளாதாரத்திற்கு விமானசேவையினால் கிடைக்கும் பங்களிப்பு மேலும் அபிவிருத்தி செய்வதற்கு முடியுமாக இருந்தது.

நவீன மூன்று (03) வான்வழிப் பேருந்து குழுவுடன் மிகின்லங்கா சர்வதேச சேரிடங்கள் 10 இற்கு 35 இற்கு மேற்பட்ட வாராந்த பயணத் தடவைகளைப் பார்க்க வழிநடாத்துவதுடன் சிறிலங்கன் விமானசேவையுடன் தூரக் கிழக்கு, மத்திய கிழக்கு, மற்றும் இந்தியா உபகண்டத்தில் பல சேரிடங்களுக்கு இணைந்த சேவைகளையும் வழங்குகின்றது.

## முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ஜனவரி முதல் டிசம்பர் 2013 வரையான செயற்சாதனைகள்

வரலாற்றில் முதற் தடவையாக பிரயாணிகளின் எண்ணிக்கை 500,000 இனை விஞ்சி 41% வருடாந்த வளர்ச்சியுடன் 505,259 ஆன பெறுமதி வரை அதிகரித்துள்ளது.

- நிறைந்த ஆசனங்களின் 76% வரை உயர்வடைதல் (முன்னைய வருடத்தில் அக்காலப் பகுதிக்குள்: 74% )
- மொத்த வருமானம் 49% ஆலஅதாவது ஐக்கிய அமெரிக்க டொலர்களில் 72.37 மில்லியன் வரை அதிகரித்தல்.

- வெற்றிகரமான செலவு முகாமைத்துவத் திட்டத்தினூடாக அலகொன்றின் கிரயமாக அனைத்து போட்டியாளர்கள் மத்தியில் குறைந்த பெறுமதியான 4.59 வரை குறைக்கப்பட்டது.
- செயற்பாட்டு எல்லை (விதிவிலக்களிக்கப்பட்ட விடயங்களைத் தவிர்த்து) 17% வரை விரித்தியடைதல்.
- வட்டி, வரி, பெறுமதித்ததேய்வு மற்றும் குத்தகையிற்கு முன்னர் இலாபகரமான தன்மையயைப் பெற்றுக் கொண்டது. ஈ.பீ(b).ஐ.ரீ.டீ.ஏ.ஆர் எல்லையானது குறித்த காலப்பகுதியில் 2% இல் உள்ளது.
- புதிய பருவகாலப் பாதைகள் மெடன், இந்துநீசியா நாடுகளுக்கு சேர்க்கப்பட்டன- மேலும் ஆசியப் பொருளாதார வலுவூட்டலுக்கு அதிகரித்த வளர்ச்சியொன்றுடன், இலங்கையின் வர்த்தகத் தொடர்புகள் மேலும் முன்னேற்றமடைகின்றன. புதிய பாதையானது முதலாவது நாளில் நிலையான இலாபகரத்தன்மை கொண்டதாக அமைந்தது. இன்றுவரை ஏற்படுத்தப்பட்ட பாதைகளில் அதிசிறந்ததாக இது பதிவாக்கியுள்ளது.
- இலங்கையை ஆபிரிக்கா கண்டத்துடன் ஏறத்தாழ இரு தசாப்தத்திற்கு பின்னர் மீண்டும் இணைத்து சீசெல்ஸ் தீவுகளுக்காக நேரடி வான் பயணங்கள் ஆரம்பிக்கப்பட்டன.
- பல தரப்பட்ட மக்களுக்கு சலுகை அடிப்படையிலான விலையிற்கு வான் பயணத்திற்கு வாய்ப்பினை ஏற்படுத்தி சேரிடங்களுக்கு பயணத் தடவைகள் மேலும் அதிகரிக்கப்பட்டன.
- பயணிகளின் வசதிகளை மேம்படுத்தி மற்றும் மேலதிக வருமானங்கள் அதிகரித்து குறைந்தபட்ச விலையிற்கு விமானத்திற்குள்ளே திரைப்படங்களை பார்க்கும் (personal entertainment device ) வசதிகள் பெற்றுக் கொடுத்தல்.
- உயர்ந்த வினைத்திறன் மற்றும் ஏனைய விமானசேவைகளுடன் தொடர்புபட்ட விற்பனை வாய்ப்புக்களுக்கு வசதிகளை வழங்குகின்ற நவீன அமேடியஸ் ஆசனங்களை ஒதுக்கும் தொகுதியிற்கு திருப்திகரமான முறையில் மாற்றம் செய்து கொண்டோம்.

## வரையறுக்கப்பட்ட மிகின்லங்கா கம்பனி

## ஜனவரி முதல் டிசம்பர் 2013 வரையான மாதாந்தச் செயலாற்றுகை

| ஐக்கிய அமெரிக்க டொலர்கள் மில்லியனில் | ஜனவரி | பெப். | மார்ச் | ஏப்ரல் | மே | யூன் | யூலை | ஓகஸ்ட் | செப்ரெம்பர் | ஒக்டோபர் | நவம்பர் | டிசம்பர் | ஜனவரி முதல் டிசம்பர் வரை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தேறிய வருமானம் | 5.07 | 5.45 | 7.00 | 5.74 | 5.67 | 6.17 | 6.25 | 7.42 | 5.71 | 6.28 | 4.98 | 6.00 | 72.37 |
| நேரடி செயற்பாட்டுச் செலவுகள் | 4.77 | 5.12 | 5.76 | 4.90 | 4.82 | 4.53 | 4.52 | 5.51 | 5.24 | 5.37 | 5.01 | 5.07 | 60.62 |
| நிலையான செலவுகள் | 1.99 | 1.88 | 2.10 | 1.83 | 1.84 | 1.85 | 1.80 | 1.97 | 1.92 | 2.05 | 1.90 | 1.98 | 23.74 |
| செயற்பாட்டு மிகை/(பற்றாக்குறை) விதி விலக்களிக்கப்பட்ட விடயங்களுக்கு முன்னர் | (1.69) | (1.55) | (0.85) | (0.99) | (0.99) | (0.22) | (0.08) | (0.06) | (1.45) | (1.14) | (1.93) | (1.06) | (11.99) |
| சீராக்கப்பட்ட செயற்பாட்டு எல்லை % | -33% | -28% | -12% | -17% | -17% | -4% | -1% | -1% | -25% | -18% | -39% | -18% | -17% |
| விதி விலக்களிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பில் எஞ்சின் பழுதுபார்த்தல் | 0.22 | 0.25 | 3.03 | 0.25 | 0.28 | 0.27 | 0.27 | 0.40 | 0.40 | 0.45 | 0.45 | 0.44 | 6.71 |
| நிதி கட்டணங்கள் | 0.08 | 0.10 | 0.14 | 0.14 | 0.23 | 0.23 | 0.22 | 0.22 | 0.23 | 0.22 | 0.23 | 0.22 | 2.25 |
| தேறிய மிகை/ (பற்றாக்குறை) | (1.98) | (1.89) | (4.02) | (1.38) | (1.49) | (0.72) | (0.57) | (0.68) | (2.07) | (1.81) | (2.61) | (1.72) | (20.94) |
| ஈ.பீ(B).ஐ.ரீ.டீ.ஏ.ஆர் | (0.53) | (0.51) | 0.44 | 0.03 | 0.02 | 0.82 | 0.93 | 1.02 | (0.40) | (0.04) | (0.87) | 0.03 | 1.13 |
| ஈ.பீ(B).ஐ.ரீ.டீ.ஏ.ஆர் எல்லை % | -10% | -9% | 6% | 1% | 0% | 13% | 15% | 14% | -7% | -1% | -18% | 0% | 2% |

# <u>கப்பற்றொழில் மற்றும் விமானசேவைத் தகவல்கள் ஆராய்ச்சி (தனியார்) கம்பனி</u>

## <u>கண்ணோட்டம்</u>

"கப்பற்றொழில் மற்றும் விமானசேவைத் துறையில் மிகவும் வினைத்திறன்மிக்க மற்றும் விளைவுபொருள்மிக்க சேவையினை வழங்குதல்" .

## <u>செயற்பணி</u>

"கப்பற்றொழில் மற்றும் விமானசேவைத் தொடர்பான தகல்களைத் திரட்டுதல், ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுதல், பயிற்சிகளை வழங்குதல், இந்த துறைகளில் எதிர்கால வளர்ச்சி மற்றும் அபிவிருத்தி ஏற்படுத்துதல்".

### குறிக்கோள்கள்

1. கப்பற்றொழில் மற்றும் விமானசேவைத் துறையிற்கு பொறுப்பாகவுள்ள அமைச்சரினால் ஒப்படைக்கும் சந்தர்ப்பத்தில் துறைமுக மற்றும் வான் மூலமாக மேற்கொள்ளப்படும் ஏற்றுமதி இறக்குமதி தொடர்பான தரவுகள், தகவல்கள் சேகரித்தல் மற்றும் தேவையான தரப்பினர்களுக்கு வழங்குதல்

2. கப்பற்றொழில் மற்றும் விமானசேவைத் துறையிற்கு பொறுப்பாகவுள்ள அமைச்சரினால் ஒப்படைக்கும் சந்தர்ப்பத்தில் துறைமுகம் மற்றும் வான் மூலமாக மேற்கொள்ளப்படும் சரக்கு போக்குவரத்து தொடர்பாக தரவுகள், தகவல்கள் சேகரித்தல் மற்றும் தேவையான தரப்பினர்களுக்கு வழங்குதல் மற்றும் அவ்வாறான நடவடிக்கைகளின் அபிவிருத்தியின் பொருட்டு கையளிக்கப்படும் ஏதேனும் நடவடிக்கைகளை நிறைவேற்றுதல்

3. இலாபம் உழைக்கும் அடிப்படையில், துறைமுகம் மற்றும் விமானசேவை மூலம் மேற்கொள்ளப்படுகின்ற ஏறறுமதி இறக்குமதி தொடர்பான தகவல்களை சேகரித்தல் மற்றும் பகிர்ந்தளித்தல்

4. இலாபம் உழைக்கும் அடிப்படையில், கப்பற்றொழில், துறைமுகம் மற்றும் விமானசேவைத் துறை தொடர்பான ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுதல் மற்றும் பொறுப்பேற்றல்

5. ஏற்றுமதி இறக்குமதியுடன் தொடர்புடைய துறைகளுக்காக பயிற்சி கல்வியினை வழங்குதல் மற்றும் வழிகாட்டல்

6. கப்பற்றொழில் மற்றும் விமானசேவைத் துறைகளின் அபிவிருத்தியிற்குரிய பயிற்சி திட்டங்கள், விரிவுரைகள், கருத்தரங்குகள், செயலமர்வுகள் மற்றும் மனிதவள அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்துதல் மற்றும் ஒருங்கிணைவு.

7. அரச மற்றும் அரச சார்ப்பற்ற நிறுவனங்களில் செயல்முறைசாராக் கல்வி, வர்த்தகம், வர்த்தகசாரா கைத்தொழில் அல்லது அறிவியல் செயற்பாடுகள் தொடர்பான தகவல்கள், தரவுகளைச் சேகரித்தல் மற்றும் பகிர்ந்தளித்தல்

8. அரச மற்றும் அரச சார்ப்பற்ற நிறுவனங்களில் வேறு ஏதேனும் துறையில் அதாவது கம்தொழில் கல்வி, நிதிச்சேவைகள், பொறியியலாளர் சேவைகள், காப்புறுதி அல்லது அரச அல்லது அரச சார்ப்பற்ற அல்லது நலன்புரி செயற்பாடுகள் தொடர்பான ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுதல் மற்றும் சாத்தியவள ஆராய்ச்சியொன்றினை மேற்கொள்ளுதல்.

**முக்கிய சாதனைகள்**

- கப்பற்றொழில் மற்றும் விமானசேவைத் துறையிற்குரிய சாத்திய வள ஆராய்ச்சியொன்றினை மேற்கொள்ளுதல் மற்றும் வழிகாட்டல்
- அரச அமைப்புக்களின் வர்த்தக மற்றும் வர்த்தக சாரா துறைகளில் பரிசோதனைகள் மற்றும் ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுதல்
- கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைந்து கப்பற்றொழில் மற்றும் விமானசேவைத் துறையிற்குரிய விரிவுரைகள், கருத்தரங்குகள், செயலமர்வுகள் ஒழுங்கமைத்தல்.
- தனியார் துறையினருக்காக ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுதல்

**<u>பௌதீக வளர்ச்சி -2013</u>**

❖ **போக்குவரத்து மற்றும் இடப்பெயர்வு மேலாண்மை பற்றிய பட்டப்படிப்பு மற்றும் டிப்ளோமா பாடநெறிகளை நடாத்துதவதற்குரிய கருத்திட்டம்**

**அறிமுகம்**

இலங்கை தென் ஆசியாவின் கப்பல், விமானத்துறை தொடர்பான அறிவு மையமாக உருவாக்கும் நடவடிக்கையிற்கு எமது நிறுவனத்தின் பங்களிப்பினை வழங்கும் நோக்கத்துடன் இந்த பாடநெறியினை நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

பல்கலைக்கழகம் செல்வதற்கான வாய்ப்பினை இழந்த மாணவர்களுக்கு சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்படும் தொழில்சார் தகைமை மற்றும் ஒரு பட்டப்படிப்பு சான்றிதழினை பெற்றுக் கொள்வதற்கான வழிகாட்டலை வழங்குதல்.

கப்பல் மற்றும் விமான சேவைத் துறையிற்குரிய பயிற்சிகள் மற்றும் மனிதவள அபிவிருத்தியினூடாக வினைத்திறன் வாய்ந்த ஊழியர்களை உருவாக்குவதற்கு பங்களிப்பினை வழங்குதல்

**இவ் வருடத்தின் முன்னேற்றம்**

தனியார் மற்றும் அரச துறைகளில் இந்த துறையிற்குரிய தொழில்களில் ஈடுபட்டுள்ளோர் (1000 மாதிரி) ஈடுபடுத்தி ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டுள்ளன.அந்த தரவுகளின் அடிப்படையில் டிப்ளோமா பாடநெறிகளைத் தொடங்கி பட்டப்பின் பாடநெறி வரை செயலாற்றுவதற்கு நடவடிக்கையெடுக்கப்படும்.

- கற்கைநெறிக்கான தொடர்புபட்ட சட்டங்களை தயாரித்தல்
- கொழும்பு பல்கலைக் கழகத்தில் மனிதவள முன்னெடுப்பு நிறுவனத்திற்கும் (IHRA) கப்பற் போக்குவரத்து தொடர்பான கல்லூரியிற்கும் இடையில் ஒப்பந்தம் நல்லுறவு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது.
- கற்கை நெறியின் உள்ளடக்கம் மற்றும் பாடவிதானம் தயாரித்தல்
- விரிவுரையாளர்களைத் தேர்ந்தெடுத்தல்
- விண்ணப்பங்களைக் கோருதல்

❖ 2012/2016 இற்காக கூட்டாண்மைத் திட்டத்தினை உருவாக்குதல்

**அறிமுகம்**

சிவில் விமானசேவை அமைச்சின் வேண்டுகோளின் பிரகாரம் 2012/2016 (5 வருடங்களுக்காக சிவில் விமானசேவை அமைச்சின் மற்றும் அதன் கீழ் காண்படும் ஏனைய தாபனங்களின் அனைத்து விபரங்களையும் உள்ளடக்கி கூட்டாண்மைத் திட்டம் தயாரித்தல்.

**இவ்வருடத்தின் முன்னேற்றம்**

கூட்டிணைக்கப்பட்ட திட்டமானது தயாரிக்கப்பட்டு இறுதி அறிக்கை சிவில் விமானசேவை அமைச்சுக்கு கையளிக்கப்பட்டுள்ளது.

**அறிக்கையைத் தயாரித்தல்**

எமது ஆராய்ச்சி நிறுவனத்துடன் தொடர்புடைய அனைத்து விபரங்களையும் உள்ளடக்கி அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டுள்ளதுடன், நிறுவனத்தினை சந்தைப்படுத்தும் பொருட்டு, அதனை அனைத்து அரச நிறுவனங்களுக்கும் அனுப்புதல்.

**ஆராய்ச்சி / கருத்திட்டம்**

மாது ஆற்றின் சாத்தியமான முறையில் சுற்றுலா கைத்தொழில்துறை ஊடாக அபிவிருத்தி செய்வதற்காக ஆராய்ச்சி (ருகுணு சுற்றுலா பணியகம் –தென் மாகாணசபை)

**அறிமுகம்**

தெற்கு மாகாணத்தில் உள்ள முதன்நிலை சுற்றுலாக் கவரக்கூடிய இடமான மாது ஆற்றினை, Home- Stay சூழவுள்ள சுற்றுலாக் கைத்தொழில்துறை ஊடாக சாத்தியமான முறையில் அபிவிருத்தி செய்ய வேண்டிய முறை அவதானித்தல்.

**இலக்கு**

சுற்றுலா தங்குமிடங்களுக்காகவுள்ள (Home - Stay) விநியோகத் சங்கிலித் தொடர் அபிவிருத்தி செய்வதற்கு பிரதேசத்தில் காணப்படும் மனித மற்றும் இயற்கை வளங்களை பயன்படுத்தல்

மாது ஆற்றுப் பிரதேசத்தில் வசிக்கும் மக்களுக்கு சொந்தமான வீடுகளை சுற்றுலாப் பயணிகளுக்குரிய தங்குமிடமாக மாற்றுதல் தொடர்பான இயலளவினை ஆராய்தல். மாது ஆற்றுப் பிரதேச வாரியான உற்பத்திகளின் கேள்வி மற்றும் வழங்கலுக்கிடையிலான ஏற்கனவேயுள்ள இடைவெளியினைப் பரிசீலித்தல்

**இவ் வருட முன்னேற்றம்**

மேற்குறிப்பிட்ட கருத்திட்டங்களுக்கு இயைவாக கருத்திட்ட முன்மொழிவினையும் பாதீட்டு மதிப்பீட்டையும் முன்வைத்தல் மற்றும் கருத்திட்ட முன்மொழிவு தொடர்பாக ருகுணு சுற்றுலாச் பணியகத்துடன் கலந்துரையாடல்

**ஆராய்ச்சி / கருத்திட்டம்**

ஏற்றுமதி மற்றும் இறக்குமதி பற்றிய தகவல் கொண்ட தரவுத் தளம் ஒன்றினை உருவாக்கல்

**அறிமுகம்**

இலங்கையில் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி தொடர்பில் ஆர்வமுள்ளவர்களுக்கு தேவைப்படும் தகவல்களை பெற்றுக் கொள்வதற்காக முறைசார் நிகழ்ச்சித்திட்டமொன்றினைத் தயாரித்தல்

**இவ் வருடத்திற்கான செயலாற்றுகை**

இலங்கைச் சுங்கத்துடன் இணைந்து தேவையான தகவல்களைப் பெற்றுக்கொள்வது தொடர்பாக கலந்துரையாடல்.

தனியார் துறையுடன் கலந்துரையாடி அவர்களின் தேவையை அடையாளங் காணல்

இலங்கைச் சுங்கம் இது தொடர்பில் தகவல்களை வழங்க சம்மதித்துள்ளது.

**ஆராய்ச்சி / கருத்திட்டம்**

அரச அபிவிருத்தி நிகழ்ச்சிகள் எவ்வாறு சமுதாயத்தைப் பாதிக்கின்றது என்பதனை அறிந்து கொள்வதற்காக செயற்றிட்டமொன்றினை முன்னெடுத்தல்

**அறிமுகம்**

இலங்கையில் தற்போதைய அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து மக்கள் குறுகிய மனப்பான்மை கொண்டுள்ளனர் என்பதனை ஆதாரப்படுத்த முடியும். இதனால் அபிவிருத்தியின் உச்ச பலன்களைப் பெற முடியாமல் உள்ளது.

**இவ் வருடத்திற்கான செயலாற்றுகை**

தற்போதைய அபிவிருத்தி நடவடிக்கைகள் பற்றி அரசாங்கத்தின் தகவலைப் பொதுமக்களுக்கு தெரிவிப்பதில் உள்ள பிரச்சினையை அடையாளங்காணல்.

கருத்திட்டங்கள் தொடர்பான அடிப்படை நடவடிக்கைகள் நிறைவேற்றப்பட்டிருப்பதுடன், இப்போதைக்கு வினாக்கொத்து மூலம் தகவல்கள் திரட்டப்படுகின்றன.

**ஆராய்ச்சி / கருத்திட்டம்**

**ஆபத்தான பொருள்களை கையாளுவது தொடர்பான கைந்நூல் பங்கிடுதல்**

**அறிமுகம்**

நிறுவனத்தினால் பிரகடனப்படுத்தப்பட்ட, கொழும்பு பல்கலைக்கழகத்தில் இரசாயனவியல் துறை ஆராய்ச்சிப் பிரிவன் கலாநிதி றொஹான் பெரேரா அவர்களால் இயற்றப்பட்ட அபாயகரமான இரசாயனப் பொருள்கள் -பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம் தொடர்பான கைந்நூல் அந்த விடயம் தொடர்பாக சிங்கள மொழியினால் எழுதப்பட்டிருக்கும் ஒரேயொரு கிரந்தமாகும். .

**இவ் வருடத்திற்கான செயற்பாடு**

கல்வி அமைச்சுடன் செய்த கலந்துரையாடி நாடு பூராவுமுள்ள க.பொ.த (சா.ப) மற்றும் க.போ.த (உ.ப) நடாத்தும் பாடசாலைகளுக்காக இந்த கைந்நூலை பங்கிடுவதற்காக திட்டமிடுதல்

ஆபத்தான இரசாயனவியல் கையாளும் தரப்பினர்களுக்கு பூரண விளக்கத்தினை வழங்குதல்

குறித்த துறை கல்வி நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள தரப்பினர்களுக்கு அது தொடர்பாக மேலும் பயிலுவதற்காக

கொழும்பு பல்கலைக் கழகத்தில் மனிதவள முன்னெடுப்பு நிறுவனத்திற்கு 100 கையேடுகளை வெளியிடுதல்

ஆயுதப் படையினர், பொலிஸ், சிவில் பாதுகாப்புப் படையினருக்கு பயிற்சி செயலமர்வுகளை நடாத்துதல் மற்றும் கையேடுகளை விநியோகிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேலும் எதிர்காலத்தில் இந்த கைந்நூலுக்கு மேலும் ஒரு பகுதியினை இணைப்பதற்கும் ஆங்கில மற்றும் தமிழ் மொழி பெயர்ப்புக்களையும் மேற்கொள்வதற்கும் எதிர்பார்க்கப்படும்.

**ஆராய்ச்சி / கருத்திட்டம்**

**சிறைக்கைதிகளின் எண்ணிக்கையின் அதிகரிப்பு மற்றும் அவர்களின் உழைப்பு நாட்டின் அபிவிருத்தி செயற்பாடுகளுக்கு உச்சளவில் பயன்படுத்தும் விதம் பற்றி ஆராய்ச்சியொன்றினை மேற்கொள்ளுதல்.**

**அறிமுகம்**

இலங்கையில் இப்போதைக்கு மறுசீரமைப்பு மற்றும் சிறைச்சாலை சீர்திருத்த அமைச்சின் கீழ் 24 சிறைச்சாலைகள் நடைமுறையில் இருப்பதுடன், அவற்றில் வசதிகளை வழங்கக்கூடிய அளவிலும் பார்க்க சிறைக்கைதிகள் தங்கியிருப்பதாக தகவல்கள் சான்று பகர்ந்துள்ளன. இந்த நபர்களை பராமரிப்பதற்காக

அரசுக்கு வருடாந்தம் அதிகளவான செலவு ஏற்கவேண்டியிருப்பதுடன், நாட்டிற்கும் பெறுமதிவாய்ந்த பிரஜைகளின் உழைப்பு இல்லாது போகின்றது. இது தொடர்பாக கவனம் செலுத்திய எமது நிறுவனம் பின்வரும் குறிக்கோளுடன் இந்த கருத்திட்டத்தினை நடைமுறைப்படுத்தி வருகின்றது.

**இலக்குகள்**

- சிறைச்சாலையில் தங்கியிருப்போர் பற்றிய சமூக அறிவியல் மற்றும் உளரீதியான வகைப்பாட்டினை மேற்கொள்ளுதல் மற்றும் அவர்களின் திறமைகளை கணடறிதல்
- சிறைச்சாலை தொகுதியிற்கு உள்ளாகும் மற்றும் தற்போதுள்ள அனைத்து சிறைக்கைதிகள் தொடர்பான தகவல்களைச் சேகரித்து அனைத்து தகவல்களையும் உள்ளடக்கிய தரவுத் தொகுதி (Data Base) உருவாக்குதல்
- சிறைக்கைதிகளின் கண்டறியப்பட்ட திறமைகளை அதிகரிக்கக்கூடிய வகையில் தொழில்சார் பயிற்சி பாடநெறிகள் கண்டறிதல்
- நாட்டின் பொருளாதார நடவடிக்கைகளுக்கு மற்றும் புதிய உற்பத்தி நடவடிக்கைகளுக்கு சிறைக்கைதிகளை ஈடுபடுத்தமுடியுமான விதம் பற்றி முன்மொழிவுகளை சமர்பித்தல்
- உளரீதியான அபிவிருத்தி மற்றும் தேர்ச்சி அபிவிருத்தியினூடாக சிறைக்கைதிகள் சீர்திருத்த முடியுமான விளைவுபொருள்மிக்க முறைமையொன்றினை முன்வைத்தல்
- அதற்காக கைதிகளின் மற்றும் அவர்களின் குடும்பங்களின் தரவுகள் முறையொன்றினை ஏற்படுத்துதல், கைதிகளை முழுமையான வகையிட்டிற்குட்படுத்துதல் மற்றும் அவர்களை நாட்டின் அபிவிருத்தியிற்கு ஈடுபடுத்திக் கொள்ளும் முறைப்பற்றிய விதந்துரைகளை முன்வைத்தல் போன்ற நடவடிக்கைகள் இதற்குள் உள்ளடக்குவதற்கு எதிர்பார்க்கப்படும்.

**இவ் ஆண்டுக்கான செயலற்றுகை**

சிறைக் கைதிகளை விழிப்புணர்த்துவதற்காக தயாரிப்பதற்காக இருந்த குறுந்தொடர் தயாரிக்கப்பட்டிருப்பதுடன் கைதிகளை விழிப்புணர்த்தியதன் பின்னர் வினாக்கொத்து மூலம் தரவுகளைச் சேகரிப்பதற்கு எதிர்பார்க்கப்படும்.

## ஜே.ஆர்.ஜெயவர்த்தன நிலையத்திற்கான கூட்டாண்மைத் திட்டத்தினை 2014/2017 க்காகத் தயாரித்தல்

ஜனாதிபதி செயலக அலுவலகத்தின் கீழுள்ள தாபனமான ஜே.ஆர்.ஜெயவர்த்தனா நிலையம் 2014/2017 வருடத்துக்கான கூட்டாண்மைத் திட்டம் (Corporate Plan ) தயாரித்தல் நமது நிறுவனத்திற்கு கையளிக்கப்பட்டுள்ளது. அது தற்போது தயாரிக்கப்பட்டு இருப்பதுடன் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா நிலையத்தினால் அதனை ஆராய்ச்சி செய்துக் கொண்டு இருக்கின்றது.

## கொழும்பு துறைமுகம் மற்றும் கட்டுநாயக்க சர்வதேச விமானநிலையத்திற்காக இடர் முகாமைத்துவ திட்டமொன்று தயாரித்தல்

கொழும்பு துறைமுகம், மாகம்புர மகிந்த இராஜபக்ஷ சர்வதேச துறைமுகம் மற்றும் கட்டுநாயக்க சர்வதேச விமானநிலையத்தினூடாக மேற்கொள்ளப்படுகின்ற ஏற்றுமதி இறக்குமதியின்போது ஏற்படக்கூடிய

விபத்துக்களைத் தவிர்த்துக்கொள்வதற்காகவும், விபத்தின் பின்னர் துரிதமாக மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைகளை செயல்படுத்துவதற்காகவும் இடர் முகாமை திட்டமொன்று நிலைநிறுத்துதல். அவ்வாறான திட்டமொன்று காணப்படுதல், விமானநிலைய மற்றும் துறைமுகத்திற்கென சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட தரங்களுக்கு இணங்குவதற்காக முக்கியம் பெறுகின்றது. வேதிப்பொருள் ஆயுத வழக்காறு தேசிய அதிகாரசபை மற்றும் மொறட்டுவ பல்கலைக்கழகம் இதற்காக தொடர்படுத்திக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படும். துறைமுகம் மற்றும் விமானநிலையத்திலிருந்து சிறந்த எதிர்வினை கிடைத்ததும் இந்த கருத்திட்டத்தினை தொடங்க முடியும்.

˙ வருமான மற்றும் செலவு நிதிக் கூற்று
(01.01.2012 முதல் 31.12.2012 வரை)

எஸ்.எல்.ஆர்.எஸ்

| காசோட்டம் | | மொத்தம் |
|---|---|---|
| நிலையான வைப்பு வட்டி (இ.வ) | | **2,983.499.96** |
| திட்டத்திற்கான கிடைப்பனவு | 360,000.00 | |
| திட்டச் செலவீனங்கள் | (78,125.00) | |
| ஏனைய வருமானம் | 75,000.00 | 356,875.00 |
| மொத்த உட்பாய்ச்சல் | | 3,340,374.96 |
| காசு வெளிப்பாய்ச்சல் | | |
| சம்பளம்/ படிகள் | **3,007,065.74** | |
| கட்டட வாடகை | 312,950.00 | |
| வாகன வாடகை | 400,000.00 | |
| தொடர்பாடற் செலவுகள் | 98,771.00 | |
| திருத்தம், அலுவலக பராமரிப்பு, மற்றும் உபகரணங்கள் | 130,225.30 | |
| சில்லறைக் காசு மீளளிப்பு | 82,164.33 | |
| பதிப்பு, காகிதாதிகள், தபாற் செலவு | 188,788.55 | |
| சொத்துக்களின் கொள்வனவு | 26,100.00 | |
| நிதிச் செலவுகள் (வ.மே வட்டி உள்ளடங்கலாக) | 163,583.49 | |
| அன்பளிப்புகள்/ கொடைகள்/ பங்குபற்றல்கள் | 19,350.00 | |
| பிரயாணச் செலவீனங்கள் | 102,926.00 | |
| பொது ஆராய்ச்சி செலவுகள் | 16,494.00 | |
| சில்லறைச் செலவுகள் | 24,815.00 | |
| மொத்த காசு வெளிபாய்ச்சல் | | 4573,233.98 |
| தேறிய மிகை/(பற்றாக்குறை) | | **1232,859.02** |

மூலம்: உள்ளக புள்ளிவிபரம் (எஸ்.ஏ.ஐ.ஆர்.ஐ)